பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"
—பாரதி

ஆசிரியர்: கே. எஸ். வேங்கடரமணி.

மாலை 3	ஞாயிறு 14-1-40 பிரமாதி௵ தை 1௳	முத்து 10

பொருள் அடக்கம்

விஷயம்		பக்கம்
1940	சென்னை-600030.	276
போகிற போக்கில்	... ...	278
கவிதாலோகம்	... வே. நாராயணன், எம். ஏ., எம். எல்.,	280
விமர்சனம்	... ...	281
என் தாயார்	... வரகவி. திரு. அ. சுப்ரமணிய பாரதி	283
ரோகிணி	... ... "குசப்ரியை"	285
பாரத நாட்டுக் கதைகள்	... ... ய. மகாலிங்க சாஸ்திரி	292
குடியின் மகிமை	... ... பி. ராஜலக்ஷ்மி	293
மனம்போல மாங்கல்யம்	... ... பார்வதி சுப்ரமணியம்	296
விடியற் காலை	... ... டி. வேங்கடராமன்	300
அனுதாபம்	... ... என். நாராயணன்	301
பிரதிக்ஞை	... ... கே. கணேசன்	303
நாட்டியப் பெண்	... ... "கலை மோஹன்"	304
கிழியும் கிளியும்	... . "சொக்கன்"	307

"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

1940

மேல்நாட்டு நாகரிகத்திற்கு ஏழரை நாட்டுச் சனி சரியாக பிடித்திருக்கிறது போல் தோன்றுகிறது. அழிவு காலம் வந்துவிட்டதா? கத்தியால் குத்திப் பிழைப்போர், கத்தியால் உயிரை இழப்பாரென்று ஏசுகிறிஸ்துநாதர் இரண்டாயிரம் வருஷத்திற்கு முன்பே சொல்லவில்லையா! இன்னும் இரண்டு மாதத்திற்குள், இந்தக் குளிர்காலம் தீர்ந்தவுடன் ஐரோப்பாவில் ஒருவிதமான சமாதானம் ஏற்படாவிட்டால், காட்டுத் தீபோல் இந்த யுத்தம் எங்கும் பரவி நாகரிகத்தையே அழித்துவிடும். கிறிஸ்து பிறந்த தினத்தையும், புது வருஷப் பிறப்பையும் மேல்நாட்டு தேசங்கள் இச்சமயம் உண்மையில் கொண்டாடி இந்த சமாதானத்திற்கு ஒரு வழி தேடவேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் கிறிஸ்மஸ் கொண்டாட்டம் செய்ததே மனச்சாக்ஷிக்கு விரோதமாகும்.

சமாதான தூது கோஷ்டி

இந்த யுத்தத்தில் சேராத நாடுகள், ஒன்று கூடி யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆப் அமெரிகாவின் தலைமையின்கீழ் ஒரு சமாதான தூது கோஷ்டி அமைக்கவேண்டும். அதை லண்டன், பாரிஸ், பர்லின், மாஸ்கோ இவ்விடங்களுக்கு தூது அனுப்பவேண்டும். அப்படிக் கலந்துகொள்ளுவதால் பயன் ஏற்படும் போலிருந்தால், புதிய வரிசையில் ஓர் உண்மையான சர்வதேச சங்கம் ஒன்றை அமைக்கவேண்டும். இப்பொழுது பரீக்ஷார்த்தமாகவாவது ஒரு சமாதான தூது கோஷ்டி யொன்றை அமைத்து யுத்த நாடுகளுக்கு அனுப்பவேண்டும்.

யுத்தங்களின் மூல காரணங்கள்

தற்கால யுத்தங்களின் காரணங்கள பல. அதில் பொருளாதார, சுயநல நோக்கங்கள்தான் மிகவும் வலுத்தவை. ஏனென்றால் அவைகள்தான் அரசியலை அடக்கி ஆளுகின்றன. அரசியல் கைக்குள்தான் ராணுவம் இருக்கிறபடியால் பொருளாதார முறைகளின் சொல்படி சண்டைகள் உண்டாகி யுத்தம் பெருகுகிறது.

தங்கள் தேவைக்கு வேண்டிய முக்கியமான உணவுப் பொருள்களைத் தாங்களே உற்பத்தி செய்யமுடியாத பிரதேசங்களில் ஜனத்தொகை தாங்கமுடியாத அளவிற்குமேல் பெருகி வருவதுதான் பிறரை அடக்கி ஆளும ஏகாதிபத்தியத்திற்கு முதல் காரணம்; நவீன யுத்தங்களுக்கு மூலாதாரம். இக்காரணத்தினால் தான் உணவுப் பொருள்களை இதர நாடுகளில், ஏராளமாய் உற்பத்திசெய்து ஆயிரக்கணக்கான மைல்கள் கட்டேற்றி அனுப்பவேண்டி நேரிடுகிறது. இந்த இயற்கை விரோதத்தினால் பலவிதமான கஷ்ட நிஷ்டுரங்கள் நவீன நாகரிகத்தில் ஏற்பட்டு சண்டை சச்சரவுகளை உண்டாக்கிவிடுகின்றன. இந்தப் பொருளாதார முறையால் ஐரோப்பாவிற்கு இரண்டு கண்டங்கள்-ஆப்பிரிக்காவும், ஆசியாவும்-அடிமைப்பட்டிருக்கின்றன. இந்த அடிமைத் தனத்தினாலேயே ஐரோப்பாவிலும் சண்டை சச்சரவுகள் ஏற்படுகின்றன. ஆகையால் எதிர்காலத்தில் உலகம் முழுவதும் சமாதானம் ஏற்படவேண்டுமென்றால், கொஞ்சம்கூட நிர்ப்பந்தமன்னியில் ஒரு நாட்டைவிட்டு மறுநாட்டிற்கு குடியேற ஜனங்களுக்குச் சரியான வசதிகள் ஏற்படவேண்டும்.

சர்வதேச சங்கம்

புத்துயிர்கொண்ட சர்வதேச சங்கம் பிறப்பதற்கும், உண்மையில் சமரசமேற்படுவதற்கும் சில சட்டதிட்ட நிபந்தனைகள் யாதெனில்: (1) பொருளாதார தேசீய எல்லைகளை அழிக்கவேண்டும் (2) முக்கியமாக பாஷையை ஆதாரமாகக்கொண்டு குறைந்த பக்ஷம் ஒரு கோடி ஜனத்தொகைக்கு ஒரு நிர்வாக யூனிட் வீதம் பல யூனிட்களை ஏற்படுத்தவேண்டும். (பாஷைதான் இப்பொழுது ஜனங்களை

ஒன்று படுத்துவதும் பிரிப்பதுமான காரண பூதமாயிருக்கிறது.) (3) மேற்படி நிர்வாக யூனிட்களுக்குபோலீஸ் படையை திரட்டுவதற்கு மாத்திரமே அதிகாரம் கொடுக்கவேண்டும் (4) நிலப்படை, கடற் படை, ஆகாயப் படை இவைகள் சம்பந்த மான அதிகாரத்தைச் சர்வதேச சங்கத் தினிடம் கொடுக்கவேண்டும். (5) ஜனங் கள் உலகெங்கும் இஷ்டம்போல் குடியேறு வதற்கு எவருக்கும் சர்வ . சுதந்திரம் இருக்கவேண்டும். இது சம்பந்தமாய் சர்வ தேச சங்கம், சாஸ்திரீகமாக சட்டதிட்டம் வகுத்து வழிகாட்டவேண்டும்.

அரசியல் நிர்ணய சபை

இந்த உத்தமமான உலக சமாதான வேலையை பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் முன் னிருந்து நடத்துவதற்கு, பிரிட்டிஷ் மந் திரி சபை உண்மையில் மனம் வைத்தால் போதும். மேற்படி சாம்ராஜ்யத்தின் ஜீவ தாதுவும், அதிகாரமும், விரைவாக லண் டனிலிருந்து டில்லிக்கு மாறிக்கொண் டிருப்பதால் சுதந்திரம் பெற்ற இந்தியா சேர்ந்து நின்று ஒத்துழைத்தால் இத் துறையில் நல்ல சேவை செய்யக்கூடும். அரசியல் சுதந்திரமில்லாமல் நம்முடைய வகுப்புப் பிரச்னைகள் ஒருநாளும் தீரா. நிச்சயம்.

அரசியல் பிரச்னைகளையும் வகுப்பு வாதங்களையும் தீர்ப்பதற்கு ஒரே வழி தான். அது அரசியல் நிர்ணய சபைதான். இதைத்தான் நான் வெகுகாலமாக வற் புறுத்தி வருகிறேன். உண்மையான முறையில் தேர்தல் நடந்து, மேற்படி சபை அமைக்கப்படுமானால் அந்த சபை இந்தியாவிற்கு நிச்சயம் சுதந்திரமும் சக்தியும் கீர்த்தியும் கொண்டுவரும் என் பதில் ஐயமே யில்லை. இந்தியா சுதந்திரம் பெற்று வாழ்ந்தால்தான், உலகில் உண் மையான சாந்தமும்சமாதானமும் நிலவும்.

கே. எஸ். வேங்கடரமணி.

நேஷனல் மியூச்சுவல்

அஷ்யூரன்ஸ் ஆப் இந்தியா, லிமிடெட்.

1938-ம் வருஷத்திய இன்ஷூரன்ஸ் ஆக்டில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.

தலைமை ஆபீஸ்:

6, பிலிப்ஸ் தெரு, ஜார்ஜ் டவுன், மதராஸ்.

அந்தஸ்தும், செல்வாக்கும் உள்ள கனவான்களிடமிருந்து சம் பளத்திற்கு கம்பெனியின் ஆர்கனைசர்களாக வேலை செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. முந்திய அநுபவம் இருந்தால் சிலாக்கியம். தொழில் உத்தரவாதம் அவசியம்.

மற்ற விவரங்களுக்குக் காரியதரிசிகளுக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

போகிற போக்கில்



"போகிற போக்கில்" எழுதி வெகு நாட்கள் ஆய்விட்டன. ஸரஸ்வதி பூஜையில் வைத்த பேனவை புனர் பூஜை செய்து இன்றைய தினம்தான் மறுபடியும் எடுக்கும்படியாக நேரிட்டது. பூஜா மலருக்கு மிக்க ஆயாசத்துடன் உண்மையிலே போகிறபோக்கில்தான் எழுதி முடித்தேன். எழுதி முடித்தேனே இல்லையோ, சகடையோகம் மறுபடியும் எனக்கு ஏற்பட்டுவிட்டது.

* * *

கங்காஸ்னனம், காசியாத்திரை, திருவேணி சங்கமஸ்னன புண்ணியம், ஹரித்வாரத்தின் ஆனந்தம், ரிஷீகேசத்தின் சாந்தம்,—மூன்ருவது வகுப்பின் அமளி! பாரத நாட்டின் அந்தரங்க உண்மையை 'போட்டோ' பிடித்தாற்போல் அறிய வேண்டுமென்ருல் மூன்ருவது வகுப்பில் வருஷம் ஒன்றுக்கு மூவாயிரம் மைல் குறைந்த பக்ஷம் யாத்திரை செய்யவேண்டும். நமது தேசத்தின் அடிமைத்தனத்தின் மூலகாரணங்கள் இங்கு நன்கு விளங்கும். இந்த மூன்ருவது வகுப்புப் பிரயாணத்தை அறிந்து, ஆண்டு அனுபவிக்காதவர் இந்தியாவின், சாராம்சத்தை ஒரு நாளும் அறியமுடியாது.

* * *

கல்கத்தா, கயா, காசி, பிரயாகை, டில்லி, ஹரித்வாரம், ரிஷிகேசம்.

கங்கையின் அழகை மொழியாமல் வர்ணிக்க முடியுமா? அதுவும் ஹரித்வாரத்தில்! உத்தம ஜாதி பத்மினி ஸ்திரீயின் லக்ஷணங்களும் கூட; அழகும் அமைப்பும், விநயமும் மேனியும், கங்கையின் முன் தலை குனிந்து நிற்கும். மதராஸ் தர்மசாலையின் மாடியிலிருந்து சலசல வென்று விரைவில் ஓடும் கங்கையின் விடா மழலைச் சொல்லைக் கேட்டுக்கொண்டு தொட்டிலில் தாலாட்டித் தூங்கும் குழந்தைபோல் நானும் கங்கைக் கரையில் காலத்தைக் கழித்தேன். நான் ஓர் பத்திரிகைக்கு ஆசிரியர் என்ற எண்ணத்தையும் இழந்தேன். கங்கைக் கரையிலும் பத்திரிகைகளின் துயரங்கள் உண்டா?

இப்படி ஹரித்வாரத்தில் மெய்மறந்திருக்கும்பொழுது ஒரு நாள் பலபல வென்று பொழுது விடியும் தருணத்தில் ஒரு கனவைக் கண்டேன். கண் எதிரில் ஒரு காக்ஷியைக் கண்டேன். பள்ளிக்கூடம் போகும் குழந்தைபோல் கையில் ஒரு கட்டு புஸ்தகமும், சிலேட்டும், பையும் வைத்துக்கொண்டு "பாரதமணி" என் எதிரில் நின்று கூவிற்று. "அப்பா, இந்த ஸ்கூலிற்கு ஒய்வில்லையா? ஒழிவில்லையா? அப்பா, எனக்கு ஒரு மாதம் லீவு கொடேன். பொங்கல் பண்டிகை வரையில் நானும் கங்கைக் கரையில் ஒழிவடைந்து உல்லாஸமாயிருக்கிறேன். அதனால் உலகில் ஒருகாரியமும் கெட்டுப்போய் விடாது. நான் சரிவர ஒரு வருஷம் 3 மாதம் நடந்துகொண்டேனே. இப்பொழுதாவது கொஞ்சம் லீவு வேண்டாமா?"

"ஆகா, குழந்தாய், அப்படியே ஆகட்டும், உனக்கு பொங்கல் வரையில் லீவு" என்று கூறினேன். சந்தோஷம் தாங்காமல் குழந்தை, அவிழ்த்துவிட்ட காளைபோல், ஓடி மாடியிலிருந்து கங்கையில் ஆனந்தமாய்க் குதித்து விட்டது. சப்தம் கேட்டு 'திடுக்' என்று விழித்துக்கொண்

டேன். குழந்தையைக் காணோம். கங்கையைச் சுற்றிச்சுற்றிப் பார்த்தேன். கங்கை தான் குழந்தையைப்போல் சலசலவென்று மழலையிட்டுச் சிரித்து சுழன்று ஓடிக் கொண்டிருந்தது. நானும் கனவு நீங்கி அமைதியடைந்து, தேளைப்போல் கொட்டும் குளிரில் கங்கா ஸ்னானத்திற்கு பிரும்ம குண்டம் நோக்கிச் சென்றேன்.

* * *

ஆக்ரா, குவாலியர், ஆஜ்மீர், பரோடா, பம்பாய் இவ்வூர்களுக்குச் சென்று மெய்மறந்து காலத்தைக் கழித்தேன். திரும்பும் காலம் நெருங்கிவிட்டபடியால் சென்ற வாரம் சென்னையும் திரும்பினேன். ஸென்ட்ரல் ஸ்டேஷன் வந்து இறங்கி கூவம் நதியைக் கண்டவுடன் நான் கங்கைக் கரையில் கண்ட கனவின் ஞாபகமும் "பாரதமணி" யின் நினைவும், ஆசிரியரின் அவஸ்தையும் வந்துவிட்டது.

* * *

இந்தப் பெரிய ஐரோப்பிய யுத்தத்தில் யுத்தம் நடக்காவிட்டாலும் போலந்து மாதிரி பல துக்கடாக்கள் அழிந்து கொண்டு வருகின்றன. இந்த யுத்தம் சிறிய நாடுகளுக்கும், சிறிய பத்திரிகைகளுக்கும் கேடாக வந்திருக்கிறது. இப்பொழுது குளிர்காலமாகையால், யுத்தம் பத்திரிகைகளிலும், ராய்ட்டர் தந்திகளிலும்தான் நடந்து வருகிறது. இதனாலே பல சங்கடங்கள் நேருகின்றன.

கலம் ஒன்றரை ரூபாய் விற்ற நெல் ரூபாய் ஐந்து விற்றால் கூலிவேலைசெய்து பிழைப்பவர்கள் எவ்விதம் வயிறு வளர்க்க முடியும்? பவுண்டு ஒன்றரையணா விற்ற பேபர் நான்கணா விற்றால், பத்திரிகைகள் எவ்விதம் வாழலாம்? இது நாம் அயல் நாட்டை அண்டிப் பிழைப்பதன் பலன்!

குழந்தைகளுக்கு வைசூரி எப்படியோ, அப்படியேதான் பத்திரிகைகளுக்கு நவீன யுத்தம். அதுவும் விளம்பரங்கள், போட்டிப் பந்தயங்களின் உதவியில்லாத பத்திரிகைகளின் கதி அம்மை குத்தாத குழந்தைகளின் நடுவில் "மகமாயி" விளையாடுவதுபோல்! ஈசனருளால் உயிர் தப்பிப் பிழைத்தாலும், குழந்தையின் முகத்தில் அம்மன் விளையாட்டின் வடுக்கள் புலப்படுமல்லவா?

* * *

நான் சென்னையில் இல்லாத சமயத்தில் சென்ற சில வாரங்களாக "பாரதமணி" வெளிவராமலிருந்ததைப்பற்றி நான் மிக்க வருந்துகிறேன். அதற்கு ஈடாக கூடியவரையில் பொங்கல் மலரை தயார் செய்து காலத்தில் அனுப்பியிருக்கிறோம். இனிமேல் இவ்விதம் நேராமல் இருக்கும்படியான ஏற்பாடுகளை நான் செய்திருக்கிறேன். ஆனாலும் நண்பர்களின் ஆதரவில்லாமல் நான் என்ன செய்ய முடியும்? இந்தப் புது வருஷத்தில் தமிழ் சேவைக்கும், "பாரதமணி"க்கும் தேவையான ஆதரவு கிடைக்குமென்று நம்புகிறேன். கலியுகமாயிருந்தாலும், கங்கா ஸ்னானத்திற்குக் கொஞ்சம்கூடப் பலனில்லாமல் போய்விடுமா?

மணி.

[illegible] - 600[illegible]

கவிதாலோகம்

(வே. நாராயணன். எம். ஏ., எம். எல்.)

மார்கழி மாதம், திருவாதிரைநாள்; ஸ்வாமி தரிசனம் செய்து, களியுண்டு, சற்று சும்மா இருந்தேன். அப்பொழுது ஒரு பகற்கனவு கண்டேன். அதை இங்கே எழுதுகிறேன்.

என் கண்முன் அற்புதமானதோர் உலகப் படம்; அது உருண்டை வடிவிலே இருந்தது; தானாகவே சுழன்றுகொண்டிருந்தது. மேற்பார்வைக்குப் பூகோளம் தன்னைத்தானே சுற்றுவதைக் காட்டுவதற்குப் பள்ளிக்கூடங்களில் அமைத்து வைத்திருக்கும் பொம்மை போலவே இருந்தது. இந்தியா இருக்கவேண்டிய இடத்தை நோக்கினேன்; நமது தேச படம் போலவே தோன்றிற்று. ஆனால் நதிகளுக்கெல்லாம் பெயர் வேறாகக் காணப்பட்டது. தேசப் பெயர் பாரத வருஷம் என்றிருந்தது. கங்கை, யமுனை நதிகளுக்கு இருக்கு, யசுசு என்று பெயர்கள் இடப்பட்டு இருந்தன. பிரயாகையினருகில் ஸரஸ்வதி என்பதற்கு மாறாக 'சாமம்' என்றிருந்தது. அதற்குத் தெற்கே கங்கையின் பெயரை 'திரிவேணி' என்னாது 'திரயீ' என்று குறிப்பிட்டிருந்தது. 'பிரம்மபுத்திரா'வின் பெயர் 'அதர்வவேதம்'. இவ்வாறு நான்கு வேதங்களின் பெயர்களைக் கண்டதும் இவை உற்பத்தியாகும் இமயமலையை நோக்கினேன். அதற்கு 'வேதகிரி' என்று பெயர். பல உபநிஷத்துக்களின் பெயர்களும் அங்கு மலைச்சிகரங்களின் பெயர்களாகக் காணப்பட்டன. சற்று யோசித்தேன்; இப்படத்தின் கருத்து ஒருவாறு விளங்கிற்று. நமது தேசத்திற்கு ஜீவாதாரமாகவும் தாரகமாகவும் உள்ளன இந்நான்கு வேதங்களே. அவற்றுள் 'திரயீ' என்னும் இருக்கு, யசுசு, சாம வேதங்கள் கங்கை போன்றதாகும்; மற்றை இரண்டு வேதங்களையும் இசையாக வகுத்ததே சாம வேதமாகையால், அதனை அந்தர்கதமான ஸரஸ்வதி நதிக்கு ஒப்பிட்டுள்ளது நியாயமே.

இவ்வாறு நான் நினைப்பதற்குள் பூகோளம் மெல்லச் சுழன்று கொண்டிருந்ததால், சிந்துநதி யிருக்கவேண்டிய இடம் கண்முன் வந்தது; அதற்கு மகாபாரதம் என்று பெயரிட்டிருந்தது. பஞ்சநதங்களுக்கும் முறையே தருமபுத்திரன், பீமசேனன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் என்று பெயர். "மகாபாரதம் ஐந்தாவது வேதமன்றோ? அதுவும் வேதகிரியிலே தானே உற்பத்தியாகின்றது; 'வேதக்கடல்' என்று பெயரிடப்பெற்ற கடலிலே சங்கமமாகின்றது." என்று அறிந்தேன்.

பூகோளம் சுழன்றுகொண்டே இருந்தது. பாலஸ்தீனத்தில் 'ஜார்டன்' என்னும் நதிக்கு 'பைபிள்' என்று பெயரிட்டிருந்தது. ஐரோப்பாவிலே கிரேக்க நாட்டிலே 'ஹோமர்' என்றொரு நதி; இத்தாலி தேசத்தில் 'வெர்ஜில்' என்ற நதி ரோமாபுரிக்கருகிலே காணப்பட்டது. மேலே நோக்கினேன். லண்டன் மாநகருக்கருகிலே 'தேம்ஸ்' நதியை 'ஷேக்ஸ்பியர்' என்றும், அதற்கருகிலுள்ள 'காம்' நதியை 'மில்டன்' என்றும் குறிப்பிட்டிருந்தது. ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலுள்ள சமுத்திரத்தின் பெயர் 'ஐரோப்பிய இலக்கிய சமுத்திரம்' என்பது. இதன் பெருமையையும் அகாதமான இதன் ஆழத்தையும் இதிலே சங்கமமாகும் இலக்கிய நதிகளையும் அவை செழித்துப் பாயும் பிரதேசங்களையும் நான் உற்று நோக்கு முன்னே பூகோளம் சுழன்று திரும்பவே, நமது பாரததேசம் கண்ணெதிரிலே தோன்றிற்று; சுழற்சி நின்றுவிட்டது. 'வங்காள விரிகுடா' என்று இருக்கவேண்டிய இடத்தில் 'ஸ்ரீராமாயணம்' என்று எழுதியிருந்தது.

நான்கு வேதங்களின் பெருக்குத்தானே 'படிகொண்ட கீர்த்தி ராமாயணமென்னும் பக்தி வெள்ளம்' வேதாந்திகளே உபப் பிரம்மணமாகி ஒரு ராமஸாகா

விமர்சனம்

சந்திரிகா: (நவீனம்) 'குகப்ரியை' எழுதியது. 1939. விலை அணு 12.

ஆனந்தவிகடனில் பல வருஷங்களுக்கு 'நவீனம்' எழுதுவதில் போட்டிப் பந்தயம் நடைபெற்றது. அதன் பயனாக 140 'நாவல்'கள் போட்டிக்கென்றே எழுதப் பெற்றன. அவற்றுள் மிகச் சிறந்ததாக மதிக்கப் பெற்றது இந்த நவீனம். இதன் முக்கிய சிறப்புக்களை 'கல்கி' முகவுரையிலே எடுத்துக் கூறியுள்ளார். (1) கதை வாழ்க்கையுடன் ஒட்டியது. (2) தமிழ் நடை உயிருள்ள நடை; தங்குதடையின்றி நீரோட்டம் போற் செல்லும் நடை. இவ்விரு குணங்களிலும் மேலானதாகக் கொள்ளத் தக்கதோர் சிறப்பும் இதில் அமைந்துள்ளது. ஆசிரியையின் கற்பனா சக்தி வெகுஉளிதமானது. ஆங்கில நாவலாசிரியருள் 'ஜேன் ஆஸ்டெ'னைப் போலவே, குகப்ரியைக்கும் தற்கால வாழ்க்கையில் தான் நேரிற் கண்டது போன்ற தொரு கதையை நவரஸங்களும் ததும்புமாறும், அசம்பாவிதமாயும் திடுக்கிடும்படியாயுமுள்ள சம்பவங்களின் உதவியின்றியே வாசிப்போர் மனதை வசீகரிக்குமாறும், சித்திரித்துக் காட்டும் மேன்மையான நடையும் முறையும் நன்கமைந்துள்ளன. 'கல்கி' போன்ற பிரபல எழுத்தாளர்களுடைய கௌரவத்தைப் பெற்று அவர்களாலும் ஸ்வீகரிக்கக்கூடிய கதைப்போக்கையுடையதான இந் நவீனமானது தமிழ் இலக்கியத்தில் ஒரு விசேஷ ஸ்தானம் பெற்றிருக்கிறது.

"வம்பன்."

(முன் பக்கத் தொடர்ச்சி)

மாகப் பரந்துள்ளது. நமது தமிழ் நாட்டை நோக்கினேன். அங்கே காவேரி, வையை, பொருநை என்றுள்ள நதிகள் கம்பர், சங்கத்தார், நம்மாழ்வார் முதலானோரின் அருள் வாக்கின் பிரவாகங்களாகக் காணப்பட்டன. இவை தாமே தமிழ் நாட்டினருக்கு ஜீவாதாரமாக உள்ளன. கம்பரது கவிதையோ, சோழநாடு மட்டிலுமன்று, தமிழ் நாட்டிலெங்கும் பரவி அந்நாடு முழுவதையும் புனலாக்கி வருகின்றது. சங்கத்தார் செய்யுட்களே வையையாற்றினைப்போல் ஊற்றுப் பெருக்கால் தமிழுலகினை ஊட்டி வருகின்றன. சடகோபனின் சொன்மாலைகளோ, தமிழ் பரவாத தேசங்களிலும் பரவிப் பரிக்கிரகிக்கப்பட்டுத் தொண்டர்களை அமுதுண்ணச் செய்து, தாமிரபருணி நதியைப்போலவே மக்கள் அனைவரையும் நாராயண பாராயணர்களாக்குகின்றன. இவ்வாறு நான் சிந்திக்கையிலே, என் கண்முன் நின்ற மாயாகோலம் திடீரென மறைந்தது; என் கனவும் குலைந்தது. நான் கண்ட காட்சி மனதினின்றும் மறையுமுன் அதை ஒருவாறு எழுத்தில் அமைக்க விரும்பினேன்; ஆயினும் நான் கனவிலே கண்ட அற்புதத்தையும் அப்பொழுது எனக்குத் தோன்றிய அரிய கருத்துகளையும் என்னால் சித்திரிக்க இயலவில்லை.

BOOKS

By
K. S. VENKATARAMANI

JUST PUBLISHED

	Rs.	As.
1. **A Day with Sambhu** (In Hindi) ...	0	3

	Rs.	A.
2. **Jatadharan & other Stories** (A collection of Short stories) ...	1	8
3. **Kandan, The Patriot** (A Novel of New India in the making) Second Edition (Revised and Enlarged)	2	0
4. **Renascent India** (A Study of Indian Problem) Third Edition	1	0
5. **A Day with Sambhu** (Talks to a Boy) (In English. Second Edition)	0	8
6. **The Next Rung** (A Constructive Study of Modern civilisation) Second Edition ...	1	0
7. **Murugan, the Tiller** (A Novel of Indian Rural Life) Third Edition	2	0
8. **On the Sand-Dunes** (Musings of Life in Free Verse) Second Edition	1	0
9. **Paper Boats** (Sketches of Indian Village life) Fourth Edition ...	1	0

Booklets :

	Rs.	A.
1. **The Indian Village** (A Ten-Year Plan) ...	0	8
2. **Dr. Annie Beasant** A Tribute ...	0	4
3. **High Ways of Astrology** By Kumbha. Second Edition ...	1	8
4. **Venkatramani:** Writer and Thinker By Manjeri S. Isvaran ...	0	8

In Tamil :

	Rs.	A.
1. **Kandan, The Patriot** (By the Author himself) ...	1	0
2. **Murugan The Tiller** By Krishna Kumari (M.L.J. Office, Mylapore)	1	8
3. **The Indian Village** (By the Author himself) ...	0	2

In Telugu :

	Rs.	A.
1. **Murugan, The Tiller** By P. Ramabrahmam (Andhra Patrika Office, Madras) ...	1	8
2. **Kandan, The Patriot** (Ramaswami Sastrulu & Sons, Madras) ...	1	4
3. **A Day with Sambhu** (Ramaswami Sastrulu & Sons, Madras) ...	1	4

In Sanskrit :

	Rs.	A.
1. **A Day with Sambhu** By Y. Mahalinga Sastri ...	0	4

THE TAGORE OF THE SOUTH

DR. K. R. SRINIVASA IYENGAR

Writes in the October issue of "Good Books" :—

Among the Indo-Anglians of to-day K. S. Venkataramani is prominent. In his important works, *Paper Boats, On the Sand-dunes,* and *Kandan the Patriot,* memorably couched in an animated and often poetical style, Venkataramani is artist as well as prophet; and when occasionally the alliance is incongruous, it is the latter that turns out to be the loser. Venkataramani's remedies may not be your remedies or mine; but his diagnosis of India's ills is substantially correct. The mere prophet is heard more distinctly in the challenging essays constituting *The Next Rung* perhaps the least read of his works.

His earliest book, *Paper Boats,* contains some excellent vignettes of South Indian village life, objective enough on the surface, but distantly plaintive in note that such a state of almost idyllic felicity should now be inexorably passing away. The musings in *On the Sand-dunes* are more direct in their poignant expression of regret. *Murugan the Tiller,* exquisite picture of life that it is, mirroring with relentlessness and finality the defeats and self-frustrations of Indian intellectuals, is incidentally an economic pamphlet. *Kandan the Patriot* is easily an achievement: the characters live, the political and human drama is vivid and dangerously perturbing, and the workmanship is worthy of all praise.

Kandan is Ramu of the earlier novel in his idealism, and they are both creatures of emotion and of memory. And they have a sure spiritual kinship with Jatadharan, the central figure in two of Venkataramani's short stories. Inevitably, perhaps, they are all partial projections of the author himself.

In all these works, once you strip them of their stylistic brilliance, their revelations of social nuances, and their packed humans more sinned against than sinning, the political and economic thesis boils down to this: the town and its civilisation are indubitably evil, and our redemption lies in returning to and rehabilitating the village. The Englishman's philosophy has been cryptically summerized into: "keep a shop and the shop will keep you." Venkataramani's quintessential message seems to be: "be faithful to the land and the land will be faithful to you." It is not a revolutionary message—even for the western world. Indeed, it is even to-day the unconscious ruling principle of several millions of mute inglorious Murugans and Kandans in the seven lakhs of Indian villages. Venkataramani is their Laureate.

SVETARANYA ASHRAMA, 7, North Mada Street, Mylapore, Madras.

என் தாயார்

(வரகவி திரு. அ. சுப்பிரமணிய பாரதி.)

("கல்லார்க்கும் கற்றவர்க்கும்"—என்ற மெட்டு.)

பத்துமாதம் சுமந்திங்கென்னைப் பரிந்துபெற்றதார்
பத்தியகல் உணவுகொண்டு பாதுகாத்ததார்
சுத்தஞ்செய்து துடைத்துவிட்டென் தூய்மைகாத்ததார்
தொட்டிலிட்டுப் பாடியாட்டித் தூங்கவைத்ததார். 1

என்னைமார்பில் அணைத்துக்கொண்டு பால்கொடுத்ததார்
என்னையெடுத்துக் கொஞ்சிமுத்தம் இட்டுவளர்த்ததார்
எனக்குத்தூக்கம் வரும்வருமென் றிரவில்விழித்ததார்
எனக்குநிலா வதனைக்காட்டி இதம்புரிந்ததார். 2

பிணியினாலே வருந்தும்போதென் அணையிலிருந்ததார்
பிரியமாக வேளைதோறும் மருந்துதந்ததார்
பணிகளுவந்து புரிந்ததன்றிப் பசிதணித்ததார்
பக்குவமாய் வைத்யஞ்செய்து பாடுபட்டதார். 3

மரணமுறு மோவென்றஞ்சி மனதுநொந்ததார்
வாடிச்சரண் புகுந்துதெய்வம் வணங்கிக்காத்ததார்
தருணமறிந் தெடுத்துவிட்டுத் தடவிவிட்டதார்
தள்ளரிய பரிவுகொண்ட தாயையன்றியார். 4

துள்ளியோடி விழுந்தபோது தூக்கிவிட்டதார்
துன்பம்நீங்கக் கதைகள்சொல்லித் தூங்கவைத்ததார்
உள்ளமகிழ்ச்சி கொண்ட்போதென் உச்சிமோந்ததார்
ஓடிவிளை யாடுமிடந் தேடிவந்ததார். 5

காற்றும்மேலே படவிடாமற் கட்டிக்காத்ததார்
கண்ணேமணியே வாடா என்று கன்னந்தொட்டதார்
சோற்றுவேளை யறிந்துவருந்திச் சோறுபடைத்ததார்
துஷ்டத்தனந் தனையடக்கித் திருஷ்டிகழித்ததார். 6

‘என்னைக்காக்குந் தந்தைதன்னை எனக்குச் சொன்னதார்
இணங்கிவணங்கி நடந்துகொள்ளும் இனிமைதந்ததார்
தன்னைநிகரில் கடவுளன்புத் தழைக்கவைத்ததார்
தண்ணருள்கொள் என்றன்அன்னை தன்னையன்றியார். 7

இணையிலிந்த நன்றிசெய்த என்றன்அன்னையை
என்றன்மனக் கோயிலில்வைத் தென்றும்போற்றுவேன்
தணிவிலன்பு கொண்டெனன்னை தாள்பணிந்திடுவேன்
சந்ததமும் ஏவல்செய்து சிந்தைமகிழ்ந்திடுவேன். 8

“அன்னேயுன்னை யல்லாலினி யாரைநினைப்பேனுன்
அன்பாய்” என்ற சுந்தரர்சொல் அதனைநினைப்பேனுன்
“மின்னேஅன்னை பதமேஇன்ப வீடென்”றோதிய
மேலோரினிய மொழியைவேத மொழியென்றெண்ணுவேன். 9

‘அன்னைபிதா தெய்வம்’என்ற ஆணைகாத்திடுவேன்
அன்னார்மனம் மகிழும்வழியில் அன்புசெய்திடுவேன்
பின்னுமவர் பெருமையென்றும் பிறங்கவாழ்ந்திடுவேன்
பேணுமவர் ஆசிகொண்டு பீடுபெற்றிடுவேன். 10

பாரத மணி

சந்தா

உள்நாடு	ரூ. 4	(தபால் செலவு உட்பட)
வெளிநாடு	ரூ. 6	(தபால் செலவு உட்பட)

தனிப்பிரதி விலை 1 அணா.

விளம்பரம்

இந்தியாவில் செய்யப்பட்ட சுதேசி சாமான்கள் விளம்பரப் படுத்த விசேஷ வசதி அளித்திருக்கிறது. ¼ பக்கம் (பத்து வரி) விளம்பரங்கள் ஒரு தடவைக்கு ரூ. 2 வீதமாக ஏற்றுக்கொள்ளப்படும்.

நீடித்த ஒப்பந்த விவரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

மானேஜர்.

ரோகிணி

"குகப்ரியை"

அன்று பாரதி திருநாள். கல்லூரியில் ஒரே கோலாகலம். அதற்கு முன் ஒரு தடவையேனும் நாங்கள் பாரதி விழா வைக் கொண்டாடியதுமில்லை. அன்று ரோகிணியின் பெருமுயற்சியினால் தான், கவர்ன்மெண்ட் கலாசாலையாயிருந்தும் பாரதி திருநாளைக் கொண்டாட அனுமதி யளித்தாள் எங்கள் பேராசிரியை.

ரோகிணிக்குப் பாரதி பாடல்களிலே அசாத்ய பித்து. எப்படியோ சண்டை யிட்டு, எஸ். எஸ். எல். ஸி. பாட புத்தகங் களிலும் பாரதியார் பாடலை முதன் முதலில் புகுத்தியது அவள்தான். அவள் ஒன்றையுமே அதிகமாய்ப் பேசமாட் டாள். எல்லாவற்றையும் செயலளவிலே செய்து காண்பிக்கும் திறன் அவளிட மிருந்தது.

சாயங்காலம். இன்னும் ஐந்துமணி அடிக்கவில்லை. மாணவிகள் கூட்டங் கூட்டமாய் "மானினம் திரிவ போன்றும் மயிலினம் வருவ" போன்றும், தோட் டத்திலும், வாயிற்புறத்து மண்டபத்தி லும் நின்று வந்தவர்களை வரவேற்றுக் கொண்டும், உபசரித்துக் கொண்டுமிருந் தனர்.

கலாசாலையின் நாடகமேடை மிகவும் சிறந்த முறையில் அலங்கரிக்கப்பட்டிருந் தது. நடுவில் ஒரு அழகிய மேஜையின் மேல் பாரதியாரின் திரு உருவப்படம் மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்டிருந் தது. வர்ண விளக்குகளின் ஒளியினால் ஒவ்வோரிடமும் பல்வேறு விதமாய் மாறி மாறித் தோன்றிக்கொண்டிருந்தன. எதிரில் தம்பூர், சித்தார் முதலிய வாத்யங் கள் வைக்கப்பட்டிருந்தன.

மணி ஐந்து அடித்து ஓய்ந்ததும் ரோகிணியின் குரல் வீணையின் நாதத் துடன் கலந்து காற்றிலே தவழ்ந்து வந்து என் செவிகளில் வீழ்ந்தது. உடனே தோட்டத்தை விட்டுவிட்டு அவசரமாய் உள்ளே நுழைந்தேன்.

எப்பொழுதும் அவள் இசையின் போக்கிலேயே ஈடுபட்டு மெய்மறந்து பாடு வது வழக்கம். அன்று அவள் அப்படிப் பாடுவதுபோலில்லை. ஆனால் கேட்பவர் கள் மந்திரத்தாற் கட்டுண்டவர்போல் பரவசமாய்த் தான் கேட்டுக்கொண்டிருந் தார்கள். ஆனந்த மிகுதியினால் நானும் தலையை அசைக்கலானேன்.

ஆயிற்று முதலில் "ஆறு துணை". பின் னர் "வீரசுதந்திரம்". அடுத்தது "சொந்த நாட்டில்" என்று தொடங்கினாளோ இல் லையோ, ஒரே கரகோஷம். வந்திருந்தவர்க ளுடைய இருதயங்களை ஒரே சோகமய மாய் அடித்துவிட்டாள். ஆனால் குரலில் ஒருவிதமான கரகரப்பு; ஒரு நடுக்கம். வழக்கமாய்க் கேட்டுக் கொண்டிருக்கும் நானே திகைத்து விட்டேன். ஏன் இந்த நடுக்கம், உணர்ச்சி மிகுந்து ஆவேசம் வரும்படி பாடக்கூடியவள், இன்று ஏன் இப்படி ஒரே சோகமயமாய் அடித்துவிட் டாள்? அது எனக்கே புரியவில்லை. இன்ன தென்று சொல்லமுடியாத ஒருவகை வேதனையினால் என் மனம் குழம்பத் தொடங்கிற்று.

* * *

அவள் நல்ல கட்டழகி. வாட்ட சாட்ட மான சரீரம். மாநிறம்; அகன்ற நெற்றி; காண்போர் கண்களையும் கருத்தையும் ஒருங்கே கவரவல்ல, கருவண்டு போன்ற கண்கள். கருத்தடர்ந்த கூந்தல் முழங் தாளை முட்டும். வாரிப் பின்னலிட்டு நுனி யை முடிபோடாமல் "பிரஷ்" போல அப்படியே விட்டிருப்பாள். அவள் நடை யிலே ஒரு தனி அழகு. முகத்தை அசைத்து அசைத்துப் பேசி புன்முறுவல் கொள்வதிலும், கையெடுத்துக் கும்பிடுவ திலுங்கூட ஒரு தனிக் கவர்ச்சி.

எங்கள் கலாசாலை ஹாஸ்டலில் தான் நான் அவளை முதல் முதல் சந்தித்தேன். அவளுக்குத் தமிழ் பேசவும் தெரியா தென்று நான் எண்ணி யிருந்தேன். "கலா

சாலையில் பெரும்பாலும் நாங்கள் ஆங்கிலத்திலேயே தான் பேசுவது வழக்கம். அவள் ஹாஸ்டலுக்கு வந்த அன்று ஏதோ ஒரு அபூர்வ வஸ்துவைப் பார்ப்பதுபோல் பார்த்ததை இப்பொழுது நினைத்தாலும் சிரிப்பு வருகிறது.

தலைவி அவளை எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தபொழுது, அவள் மலையாளத்துப் பெண்ணாயிருக்கலாமென்று நினைத்தேன். அவள் தமிழ்நாட்டுப் பெண்ணென்று எனக்குத் தோன்றவே யில்லை. தமிழ் வகுப்பில் அவளைக் கண்டதும் திடுக்கிட்டேன். "என்ன ? இவளா தமிழ் படிக்கப் போகிறாள். அட ராமா! இதென்ன வேடிக்கை" என்று லலியிடம் சொன்னேன்.

அவளுக்கும் காது கேட்டுவிட்டதோ என்னமோ? என் பக்கம் திரும்பினாள். முகத்திலே இளமுறுவல்; அந்தக் கருவிழிகளில் ஒரு விஷமத்தனம்.

"ஹல்லோ! தங்கம், பாடம் எப்படி ?" என்று கேட்டுவிட்டாள். நான் வேறொன்றும் பேசத் தெரியாதவளாய் "நீ என்ன நினைக்கிறாய் ?" என்று திருப்பிக் கேட்டேன்.

"ஏன்? என்னைப் பார்த்தால் தமிழ் படிப்பவளாய்த் தோன்றவில்லையா?"

நான் தயங்கினேன். அன்றுதான் அவள் முதல் முறை தமிழ் பேசி நான் கேட்டது. அவ்வளவுதான். பரபரவென்று எழுந்து என் இருகரங்களையும் பற்றித் தன் அருகில் உட்காரவைத்தவளாய் தானும் 'தொப்'பென்று என் பக்கத்திலுட்கார்ந்தாள் ரோகிணி.

அன்று முதல் இதுவரையில் ஒருநாளாவது நானும் அவளும் பிரிந்து எங்கும் போனதே கிடையாது. வகுப்பிற்காகட்டும், விளையாடுவதற்காகட்டும், வேறு எந்த வேடிக்கை விநோதங்களுக்காகட்டும் தனியே போவதே இல்லை. ஆனால் அவள் பூர்வோத்திரத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாது. எப்பொழுது அவளே வலிய வந்து சொல்லவில்லையோ, நாமாகக் கேட்பானேனென்று நானும் கேட்கவுமில்லை.

* * *

ரோகிணி பாடி நிறுத்திவிட்டாள். மேடையிலும் சபையிலும் "ஆசை முகம் மறந்து" என்று ஒரே கூக்குரல். அவள் பாடத் தொடங்கினாள். ஆனால் ஒரே சோகமயம். குரலில் ஒவ்வொரு அசையிலும் பிரிவின் ஏக்கம் தொனித்தது. "ஆம். கடந்த சில நாட்களாகவே அவள் முன்போலில்லையோ ? அல்லது நாம்தான் அவளுடைய இந்த நிலைமையைக் கண்டு கொள்ளவில்லையோ ?" என்று நானே சந்தேகப்படலானேன். ஒன்றுமே விளங்கவில்லை. ஒரே குழப்பம்.

அன்று மகா யுத்தம் ஆரம்பித்த ஏழாவது நாள். கடற்கரையில் விளக்கே கிடையாது. இருள்; ஒரே கன்னங்கரிய இருள் தான் சூழ்ந்திருந்தது. அவள் மனதிலும் இத்தகைய இருள்தான் சூழ்ந்திருக்கிறதோ என்று நினைத்தேன். மறுவிநாடி "ஒருவேளை அவளுக்கு வேண்டியவர்கள், நெருங்கிய நண்பர் சுற்றத்தார் யாராவது மேல் நாட்டில் எங்கேயாவது இருக்கிறார்களோ? ஒருவேளை அவளது காதலன்..." ......என்று எண்ணுகையில் சட்டென்று யாரோ தொடுவதுபோல் தோன்றத் திடுக்கிட்டேன்.

"என்ன! தங்கம்! பயந்துவிட்டாயா ? நீதான் எதற்கும் அஞ்சாத சூரப்புலியாயிற்றே" என்றாள். ஆனால் அந்த குரலில் வழக்கம்போலிருக்கும் கலகலப்பில்லை.

"இல்லை. இல்லை. ஏதோ யோசித்துக் கொண்டிருந்தேன். எப்பொழுதும் நீ சந்தடியில்லாமல் நடந்து வரமாட்டாயே. அதனால்தான் நான் கண்டுகொள்ள முடியவில்லை."

"வழக்கம்போல்தான் வந்தேன். ஆனால் கற்பனை உலகில் நீ நெடுந்தூரம் சென்று சுழன்று கொண்டிருக்கிறாய் என்று தோன்றிற்று. அதைக் கலைத்து உன் ஆனந்தத்தைக் குலைப்பானேன் என்றுதான் அடிமேலடிவைத்து வந்தேன்."

" கற்பனை உலகில் எதைச் சித்தரித்துக் கொண்டிருந்தேன் தெரியுமா ?"

" ஆகா! தெரியாமலென்ன! திவ்ய மாய்த் தெரியும். "

" தெரியுமா ? ஆனல் சொல் பார்க்கலாம். "

" உன்னிடம் சொல்ல வேண்டுமென்று கட்டாயமா ?"

" இல்லாவிட்டால் நீ எண்ணியது சரியா தப்பா என்று எப்படி நிர்ணயிப்பாய் ?"

" தங்கம்! எண்ணங்கள் அழிந்துபோவதில்லை என்று சொல்லுகிறார்களே அதை நீ நம்புகிருயா ?"

" ஆம்! நம்புகிறேன். நம்பாமலென்ன? அன்று. ராமகிருஷ்ண மடத்தில், விவேகாநந்தரது சீடர், அபேதானந்தர் தமது அமெரிக்கா அனுபவங்களைச் சொன்ன பொழுது எத்தனை விதமான உவமைகள் தான் சொன்னர். அந்தப் பிரசங்கத்திற்குப் பிறகு தான் இவைகளில் எனக்கு நம்பிக்கை. ஆனலும் சில சந்தேகங்கள் குறுக்கே வந்துவிடுகின்றன."

அவள் முகத்தில் மின்னல்போல் ஒரு சிறு மாறுதல் தோன்றி மறைந்தது.

"என்ன ரோகிணீ! என் 'டெலிபதி' முறையைப் பழகலாமென்று பார்க்கிருயா ?"

"எனக்கு அந்த விஷயங்கள் அவ்வளவாய்ப் பிடிக்கவில்லை."

" ஆனல் என்னை நம்புகிருயா, என்று கேட்டதன் கருத்தென்ன ?"

" சும்மா ஏதோ தோன்றிற்று. கேட்டு வைத்தேன். அவ்வளவுதான் " என்று சொல்லியவளாய் மெதுவாய் குனிந்து என் இருகரங்களையும் பற்றியவளாய் " நீ எதைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தாய் என்று சொல்லட்டுமா ?" என்று கொஞ்சும் குரலிற் கேட்டாள். அவள் முகத்தில் ஒரு ஏளனப் புன்சிரிப்புத் தோன்றிற்று.

" என்ன ? நீங்கள் இன்னுமா படுக்கைக்குச் செல்லவில்லை. அப்பப்பா! இந்த இருளில் கடலின் பேரிரைச்சல் எவ்வளவு பயங்கரமாய்த் தோன்றுகிறது. எனக்கென்னமோ காரணமில்லாமல் 'திக்திக்' என்றிருக்கிறது." என்று கூறியவளாய் ஹாஸ்டல் தலைவி அங்கேயே நின்ருள். நாங்கள் தட்டுத் தடுமாறி எழுந்து அறைக்குட் சென்ருேம்.

* * *

கம்பராமாயண வகுப்பு நடந்துகொண்டிருந்தது. ஆசிரியர் வெகு அற்புதமாய் எடுத்து விவரித்துக் கொண்டிருந்தார். சில மாணவிகள் கவனித்தும் கவனியாமலும் வேறு எதையோ படித்துக் கொண்டிருந்தார்கள். ஆசிரியரோ ஒன்றையும் சட்டை செய்யாதவராய் ஓசை நயத்திலேயே ஈடுபட்டுத் தம்மையும் மறந்து விவரித்துக் கொண்டிருந்தார். எப்பொழுதும் கம்பராமாயணம் ஆரம்பித்து விட்டாற் போதும். ரோகிணியின் கண்கள் அவர் முகத்தை விட்டுப் பெயராது. மனமூன்றிக் கேட்டுக்கொண்டே இருப்பாள். செய்யுள் முடிந்து அவர் பேச்சு நின்ற பிறகுதான் குறிப்பு எழுதுவாள்.

அன்று அயோத்யா காண்டத்தில் நகர் நீங்குபடலம். ரோகிணி இந்த வகுப்புக்கு வரமாட்டாளென்று எண்ணினேன். ஏனென்ருல், அன்று நான் வகுப்புக்கு வரும்வரையில் அவள் படுக்கையைவிட்டு எழுந்திருக்கவே யில்லை. ஆனல் அவள் கோடியில் உட்கார்ந்திருந்ததைப் பார்த்ததும் நான் திடுக்கிட்டேன்.

தூக்கமின்மையாலோ அல்லது எதனுலோ அன்றலர்ந்த மலர்போலிருக்கும் அவள் முகம் வாடி ஒளிமழுங்கிக் கிடந்தது. கண்களில் ஒருவிதமான சோகத்தின் சாயை. வரண்ட இதழ்களில் உலர்ந்த சிரிப்பு. இந்த நிலையில் அவள் வகுப்பிற்கு ஏன் வந்தாளென்று எனக்குத் தோன்றிற்று.

லலி மெதுவாய் என் காதைக் கடித்தாள். "ரோகிணிக்கு என்ன உடம்பு "ஹிஸ்டீரியாவா?" என்ன தங்கம்! நீதான் சொல்லேன், மிஸ்டர் மூர்த்தியை... ...அது நிஜந்தாஞ?"

எனக்குத் தூணுக்கென்றது. வெறும் உளறல். மிஸ்டர் மூர்த்தி என் தமையனென்று அவளுக்குத் தெரியாது பாவம்!

"என்ன மௌனம்? உண்மையென்ற குத்தமா?" என்று என் முதுகில் ஒரு தட்டுத் தட்டினுள் லலி.

நான் அப்பொழுதே தூங்கி விழித்தவள்போல் தட்டுத்தடுமாறி "இல்லையே, அப்படி ஒன்றும் தெரியவில்லையே" என்றேன்.

இதற்குள் மற்ற மாணவிகள் எங்கள் பக்கம் திரும்ப எங்கள் பேச்சு முற்றுப் புள்ளி யிடப்பெற்றது. ஆசிரியர் எல்லோரையும் ஒருமுறை சுற்றிப் பார்த்து விட்டு:—

"உந்தாது நெய்வார்த்து உதவாது காலெறிய
நந்தா விளங்கி நடுங்குகின்ற நங்கைமார்
செந்தாமரைத் தடங்கண் செவ்வியருணேக்கம்
அந்தோபிரிதுமோ ஆவிதியே ஓஎன்பார்"

என்ற பாடலின் கடைசி அடியை விவரித்துக்கொண்டிருந்தார்.

ஆசிரியர் தம்மையே மறந்திருந்தார். ஆ விதியே ஓ என்பார் என்ற சொற்றொடர். ஒரே சோக கீதமாய் அவர் வாயினின்றும் எழுந்து அறை முழுவதும் எதிரொலித்ததுபோல் தோன்றிற்று. அவர் விழிகளில் நீர் மல்கி நின்றது. குரலில் கம்பலை நிமிர்ந்து ரோகிணியைப் பார்த்தேன். அவள் தலை குனிந்தவளாய் முன்றானையை விசிறிய வண்ணம் எழுந்து போய்விட்டாள். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. கண்ணைக் கட்டி காட்டில் விட்டாற்போ லிருந்தது. ஏதோ ஒருவிதமாய் வகுப்பு முடியும்வரையில் பொறுத்திருந்தேன். மணி அடித்ததும் நேராய் அறைக்குட் புகுந்தேன்.

கட்டிலில் குப்புற வீழ்ந்து கிடந்தாள் ரோகிணி. உடலின் அசைவிலிருந்து அவள் தேம்பித்தேம்பி அழுகிறுளென்று தெரிந்தது. மெதுவாய் அவள் அருகில் உட்கார்ந்து. "ரோ! இதென்ன இது எழுந்திரு" என்றேன்.

"ஒன்றுமில்லை. என்னைத் தனியே விட்டுவிடு" என்றுள்.

நான் அசையவேயில்லை. "தங்கம்! நீ டிபன் சாப்பிடப் போயேன். எனக்காக நீ ஏன் காயவேண்டும்?" என்றுள்.

அவள் பேச்சிலிருந்து அவள் எதையோ மறைக்க முயலுகிறுளென்று புரிந்து விட்டது. "ரோ! எதுவாயிருந்தால்தானென்ன? என்னிடம் ஒளிப்பானேன்? உள்ளதை வாய்திறந்து சொன்னல் ஏதாவது ஒரு ஆறுதல் கிடைக்கலாம். நீயே ஏனிப்படி கடந்துகொள்ளுகிறுய்?" என்று கேட்டுவிட்டேன். நான் உட்கார்ந்திருந்த இடத்தின் அருகில் தலையணைக் கடியில் ஒரு தினசரியும், ஒரு கட்டுரையும் இருந்தன. அவைகளை வெளியிலிழுத்தேன்.

முதலில் மிகுந்த பரபரப்புடன் அவைகளைப்பற்றி "ஐயோ! எடுக்காதேயேன், வேண்டாமே!" என்று கெஞ்சலானுள். நான் விடவில்லை. மறுவிநாடி "சரி சரி, நீயும் பார்த்து வை" என்று என் கையிலேயே விட்டுவிட்டாள்.

பத்திரிகையின் முகப்பில், ஸ்வாமி அபேதானந்தரது படமும், அவர் சமாதியடைந்த விவரங்களும் குறிக்கப்பட்டிருந்தன. பேப்புரைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தேன். வேறொரு விஷயமும் அதிலில்லை. அதைக் கீழே போட்டுவிட்டுக் கட்டுரையைப் பிரித்தேன்.

* * *

என் அருமைக் கண்மணி ரோகிணிச் செல்வத்திற்கு—

நீ இதைப் படிக்கும்பொழுது நான் என்னும் இந்த சரீரம் தனது மகா யாத்திரையை முடித்திருக்கும். ஆனலும் உனக்கு ஒன்றுமே தெரியாத ஒரு இருளில் விட்டுச் செல்வதைவிட, சில விஷயங்கள் தெரிந்திருந்தால் உன் பிற்கால வாழ்வில் நேரிடும் சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ள உதவுமென்றே இதை எழுதுகிறேன்.

என் செல்வமே! இதைப் படித்தபிறகு நீ என்னைப்பற்றி என்ன எண்ணினலும் சரி, என் மனச் சாட்சிக்குத் தோன்றிய

படிதான் நான் செய்திருக்கிறேன் அவளை உன் தாயை நான் எவ்வளவு நேசித்தே னென்பதை வெறும் வார்த்தைகளினால் தெரிவிக்க முடியாது. ஆனால், அவள்— ஆம். இப்பொழுதுதான் நடந்ததுபோ லிருக்கிறது.

அவளுக்கு அப்பொழுது வயது பதி னேழு. அவளை நான் முன்பின் அறியாத சீமைக்கு எப்படி அழைத்துப் போவது? பரீக்ஷைகள் எல்லாம் தேறியாயிற்று. வேலை, வேலை என்று ஆனமட்டும் அலைந்து பார்த்தேன். ஏதாவது கிடைத்தால்தானே! கடைசியில் ரயில் சார்ஜுக்குகூட வழி யில்லை. ஜடையில்லையைக் கழற்றிப் 'புரை' யில் வைத்திருந்தாள். அதை எடுத்துக் கொண்டு சொல்லாமல் ஓடிவிட்டேன். என்ன நினைத்தாளோ கடவுளுக்குத்தான் தெரியும்.

ஆயிற்று. கல்கத்தாவுக்கு வந்தும் வருஷம்இரண்டாயிற்று. ஏதோ ஒன்று அரை கிடைத்தது. அரை வயிற்றுக்குக்கூடப் போதாமல் இருந்தது, பிறகு அதுவுமில்லை. அந்த சந்தர்ப்பத்தில் தான் சுந்தரத்தின் நட்புக் கிடைத்தது.

சுந்தரம் தங்கமான பையன். கள்ளம் கபடே தெரியாது. முகத்திலே பால்வடி யும். பெரிய அரட்டைக்கல்லி. ஓயாமல் 'சளசள'வென்று பேசிக் கொண்டே இருப்பான். சம்ஸ்கிருதத்திலும், பாலியி லும் நல்ல ஞானம். வீண்பொழுது போக் காமல் நானும் அவனிடம் 'பாலி' படிக்க ஆரம்பித்தேன்.

அந்த சமயத்தில் கொழும்பிலிருந்து பௌத்த சமய நூல்களைக்கற்கும் பொருட்டு ஒரு இளைஞன் வந்திருந்தான். யாழ்ப்பாணத்திலுள்ள பௌத்த மடத்திற் குப் பிற்காலத்தில் தலைவனாய் வரக்கூடிய வன். அவன் பெயர் சித்தார்த்தன். அவ னுடன் நாங்களும், நமது வேத வேதாந் தங்களையும், பௌத்த ஜைன, சமய நூல் களையும் படிக்கத் தொடங்கினோம்.

திடீரென்று எனக்கு விஷ ஜுரமும் வர ஆரம்பித்தது. இரண்டு மூன்று மாதங் கள் படுத்த படுக்கையாய்க் கிடந்தேன். சுந்தரம் எனக்காகப் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. நோயுற்றிருந்த பொழுதும், அதற்குப் பிறகும் அவன் எனக்காகச் செய்த சேவையை எப்படி மறைக்க முடியும்? அனாதையாய்க் கேட்பாரற்று கை யிலே காலணாவு மில்லாமல், கிடந்த என்னை அரும்பாடுபட்டுப் பிழைக்க வைத்தான்.

நாள் செல்லச் செல்ல, எல்லா விஷயங் களிலும் என் அபிப்பிராயமும் அவன் அபிப்பிராயமும் ஒன்றுபடத் தொடங்கின. நிறைந்த நிலா முற்றத்தில், நானும் அவ னும் சித்தார்த்தனும் மணிக்கணக்காய் வேத வேதாந்தங்களைப் பற்றியும் அரசி யல், பொருளாதாரப் பிரச்னைகளைப்பற்றி யும் அலசி அலசி முடிவு கட்டுவோம்.

என் செல்வமே! அந்த சமயத்தில்தான் நீ பிறந்திருந்தாய். நோய்வாய்ப்பட்டுக் கிடந்தபோது நான் அவளுக்குக் கடிதமே எழுதவில்லை. தெளிந்து எழுந்த பிறகு தான் மறுபடி எழுதத் தொடங்கினேன். அவளுடைய ஒவ்வொரு கடிதமும் உன் னைப்பற்றிய செய்தியைத்தான் சுமந்து வரும். கடிதத்தைப் படிக்கும்பொழுது, மறுவிநாடி அங்கே வந்து குதித்து உன் னையும், அவளையும் சேர்த்து அணைத்துக் கொண்டு பறந்து வந்துவிடவேண்டு மென்று ஆவல் துடிதுடிக்கும்.

ஆனால், பணம், பணம். அதுதானே எல்லாவற்றிற்கும் குறுக்கே நிற்கிறது. கடைசியில் சுந்தரத்தின் பெருமுயற்சியி னால் வேலை ஒன்று கிடைத்தது. உடனே சம்பளத்தை அனுப்பி (தகுந்த துணையு டன்) புறப்பட்டு வரும்படி எழுதினேன்.

கடைசியில், அவள் வந்து சேர்ந்தாள். என் பிரிவினால் ஏங்கி இளைத்து மெலிந் திருப்பாளோ என்று நினைத்தேன். ஆனால் முன்னைவிட சில வருஷங்கள் இளமை யாகவே தோன்றிற்று. உடல் மட்டும் சற்றே மெலிந்திருந்தது. மற்றபடி அதே முல்லைச்சிரிப்பு. முகத்தில் ஆனந்தம் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. ஸ்டேஷ னில் என்னைக் கண்டவுடன் "கடைசியில் தனியாகவே நான் புறப்பட்டு வந்துவிட்

டேன்" என்று ஆனந்த மிகுதியாற் கூவி விட்டாள்.

"அடே! பாக்யசாலி" என்று கூப்பிட்டுக்கொண்டே என் முதுகிற் தட்டுவான் சுந்தரம். நான் ஆனந்தத்தில் மூழ்கிச் செயலற்று நின்றுவிடுவேன். சந்தேகமென்ன? நான் பாக்யசாலிதான். இத்தகைய கட்டழகி கல்யாணியைமனைவியாகப் பெற்றவன்—வெறும் உடலழகு மட்டுமா? அதற்கேற்ற குணம், புத்திசாலித்தனம். தங்கவிக்ரகம் போன்ற சின்னஞ் சிறுகிளிக்குஞ்சு. என் வாழ்க்கை பிறர் கண்டு பொறாமை கொள்ளத்தக்கதாய்த் தானிருந்தது.

சுந்தரத்தை நான் வேற்று மனிதனாகவே கருதவில்லை. எங்கள் வாழ்க்கைக்கிடையில் அவன் ஒரு ஆனந்த நிலயமாய்த் தோன்றினன். கலகலவென்ற பேச்சும் சிரிப்பும் பரிகாசமும், வாழ்க்கையை இன்னும் ஆனந்தகரமாகச்செய்து கொண்டிருந்தது. ஓயாமல் உன்னைத் தோளிற் தூக்கிச் சுமப்பான். அவனை மனிதனாய் நினைப்பதா தெய்வமாய் நினைப்பதா என்றுகூடச் சில சமயங்களில் தோன்றும்.

திடீரென்று ஒரு நாள் என் உள்ளத்திலே புயல் தொடங்கிற்று. பல பல சொல்லுவானேன்? சுந்தரம் அவளழகில் மயங்கிவிட்டான். குற்றமென்ன? யோசித்துப் பார்த்தால் இதில் ஒன்றுமே குற்றமில்லை. அவளுடைய பேரெழிலும், அன்பும், பணிவும் உலகத்தையே மயக்கவல்லதாயிற்றே! இவன் மயங்கியதில் ஆச்சர்யமென்ன? அவளும் தன் மனப்பீடத்தில் அவனுக்கு இடமளித்து விட்டாள். எத்தனை நாளாயிற்றோ—கடவுளுக்குத்தான் தெரியும்...அவளை என் காதற் தெய்வமாய் வழிபட்டேன்—ஆனல்—

ஒருநாள் திடீரென்று ஆபீஸிலிருந்து சீக்கிரமே வந்துவிட்டேன். அப்பொழுது உனக்கு வயது இரண்டு. உன்னை மடியில் வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள் அவள். அவளுக்குப் பின்புறம் நின்று கொண்டு அவன் உங்களிருவரையும் சேர்த்தணைத்து முத்தமிடக் கொண்டிருந்தான்.

ஒரு க்ஷணம். உலகமே சுற்றுவது போல் தோன்றிற்று. வந்தவழியே திரும்பிவிட்டேன். ஆனல் அவள் என் மனநிலையை எப்படியோ கண்டுகொண்டாள். அவள் விஷயத்தில் நான் ஒரு சிறு மாறுதலைக் கூடக்காண முடியவில்லை. எனக்கோ நாம் கண்டது மெய்யா? பொய்யா? என்று தோன்றிவிடும்போலாகிவிட்டது. மனதைத் திடப்படுத்திக் கொண்டேன். அன்று கேட்டுவிடுவதென்றே தீர்மானித்தேன்.

இரவு ஒன்பது மணி. சாப்பிட்டாயிற்று. வழக்கம்போல் வெற்றிலை மடித்து வைத்துக்கொண்டிருந்தாள் அவள். நெஞ்சு படபடவென்றடித்துக் கொண்டது. கேட்கலாமா? வேண்டாமா? இந்தப் பரம சங்கடமான நிலைமையில் எத்தனை நாளிருப்பது? இருவரும் வேண்டுமென்றே நெறி பிறழ்ந்து விட்டார்களா? இல்லை. சந்தர்ப்பம் அப்படி நேர்ந்துவிட்டது. இத்தகைய புனித வடிவத்தை அளித்த கடவுள் களங்கத்தையுமா அளிக்கவேண்டும்? ......கடைசியில் மெதுவாய்ச் சமாளித்துக் கொண்டு கூப்பிட்டேன்.

அவள் நடுங்கியவளாய் எழுந்து என்னருகில் வந்து நின்றாள். சுந்தரம் வானவீதியிலிருக்கும் நக்ஷத்திரங்களைக் கணக்கிட்டுக்கொண்டிருந்தான். நான் மெதுவாய் அவள் கரங்களைப்பற்றி "எத்தனை நாளாக இந்த நாடகம்?" என்றேன்.

அவள் உடல் நடுங்கிக்கொண்டிருந்தது. சுந்தரம் திடுக்கிட்டான். ஆனல் பேச நாவெழவில்லை. அவள் அடியற்ற மரம் போல் என் காலடியிற் கிடந்தாள். அந்த நிலையிலும் கூட அவள்மேல் எனக்கு வெறுப்போ கோபமோ ஏற்படவில்லை. சுந்தரம் பேசவேயில்லை. ஆனல் இன்னதென்று சொல்லமுடியாத ஒருவகை வேதனையினல் தவித்தவனாய் எழுந்து தன் மடியிலிருந்த கத்தியை எடுத்து என்னிடம் நீட்டி, "அடே! நான் துரோகி.

என்னைக் கொன்றுவிடு" என்று மிகவும் சாவதானமாகக் கூறினான்.

"சுந்து! நீ துரோகியன்று. நான் நெடு நாட்களாகவே விடுதலைக்கு வழி தேடிக் கொண்டிருந்தேன். மனைவியையும், குழந்தையையும் காப்பாற்றும் பொறுப்பு என் மேல் சுமந்திருந்தது. இப்பொழுது நீ அதை ஏற்றுக்கொண்டாய். இனிமேல் எனக்கு இங்கென்ன வேலை?"

ஆயிற்று. வருஷம் இரண்டாயிற்று. நான் தீக்ஷைபெற்றுச் சன்யாசி யாகிவிட்டேன். ஆனால் மனஅமைதி என்பது மட்டும் ஏற்படவில்லை. குருநாதர் "அப்பனே, மனதைத் துற. உலகைத் துறத்தல் துறவல்ல. மனத் துறவுதான் வேண்டும்" என்று அடிக்கடி கூறுவார். எந்த அமைதியைத் தேடி அல்லும் பகலும் அலைந்தேனோ, அந்த அமைதி என் எதிரிலேயே காத்துக் கிடந்தது. ஆனால் என்னால் அதை அறிந்துகொள்ள முடியவில்லை. திடீரென்று ஒருநாள் ஒரு கடிதம் வந்தது. சுந்தரம்தான் எழுதியிருந்தான். கடிதம் கல் நெஞ்சையும் உருக்க வல்லதா யிருந்தது. கடந்த சில நாட்களாக அவனுக்கு ஏதோ ஒருவிதமான மனக் குழப்பம் ஏற்பட்டுத் தவிப்பதாகவும், என்னைப் பிரிந்தபிறகு அவர்களுக்கும் மன அமைதியில்லை என்றும், அவள் மிகவும் பலவீனமான நிலைமையிற் படுத்திருப்பதாகவும், என்னை ஒரு முறை பார்க்கவேண்டுமென்று தவியாய்த் தவிப்பதாகவும், எழுதியிருந்தான்.

நான் புறப்படச் சித்தமானேன். ரயிலில் பாதி வழி சென்றுகொண்டிருக்கும் பொழுதே தந்திகள் பறக்க ஆரம்பித்தன. பிரக்ருதி தேவி, குவெட்டா நகரின்மேல் கோபித்து, கோர தாண்டவமாடிக்கொண்டிருக்கிறாள் என்ற வதந்தி எதிர் கொண்டு வந்துவிட்டது. வந்தது வந்தோம். பூகம்பத்திற்குத் தப்பிப் பிழைத்தவர்களுக்கு ஏதாவது உதவி செய்வோமென்று எண்ணி அங்கிருந்து "குவெட்டா"வின் எல்லையைச் சமீபித்தேன்.

நாங்கள் போய்ச் சேருவதற்குள் நகரமே இருந்த இடம் தெரியவில்லை. அப்பப்பா! அந்த பயங்கரமான காட்சியும் கூக்குரலும் நினைத்தாலே குலை நடுங்கும். அந்த நிலையில் அங்கங்கே தொண்டர்கள் நின்று ஒவ்வொரு இடத்தையும் ஆராய்ந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

கடைசியில் ஒரு வீட்டில் உன்னைக் கண்டெடுத்தேன். உன்னைக் கண்ட உடனேயே, என் மனமும் கண்களும், நீதான் என்று சொல்லிவிட்டன. ஆனால் துறவியாகிய நான் உன்னைப் பாதுகாக்க முடியுமா? ஆகவே உனக்கு வேறு புகலிடம் தேடினேன். மேல் நடந்த விஷயங்கள் தான் உனக்கே தெரியும்.

ஆனால் ஒவ்வொரு நாளும் உன்னைக் காண வேண்டுமென்றும் உன்னைத் தொட்டுத் தடவி, என் செல்வமே என்று கொஞ்சிக் கதறி அழுதுவிட வேண்டுமென்றும் நெஞ்சு துடி துடிக்கும். ஆனால் உன்னெதிரில் நான்தான் உன் துர்ப்பாக்கியனான தந்தை என்று சொல்லிக்கொள்ள என் மனம் ஒப்பவில்லை. இருந்தாலும் ஒரு வார்த்தை — என் தங்கமே! என் கண்மணி ரோகிணி! உனக்குப் போதுமான வசதிகள் ஏற்பாடு செய்து விட்டேன். என் கடமையை நான் செய்தே விட்டேன். (துறக்க வில்லை) என் தங்கமே! எனக்காக ஒரு துளி கண்ணீர் சிந்துவாயானால், அதுவே என் ஆத்மாவுக்குச் சாந்தியளிக்கும். எந்த சாந்தியைத்தேடி அலைந்தேனோ, அது கிட்டவில்லை. உலக சேவையின் மூலம் சாந்தியைப் பெற முயன்றேன்.

"கடந்த ஞானியும் மறப்பரோ தம் மக்கள் மேற்காதல்" என்ற மொழி என் பொருட்டேதான் ஏற்பட்டதோ?——

* * *

"ஆனால் ஸ்வாமி அபேதானந்தர் தான் உன் தந்தையா?" என்று ஆச்சரிய மிகுதியினால் கூவி விட்டேன்.

"இல்லை, இல்லை. அபசாரம் அப்படிச் சொல்லாதே. அவரது மரணம் இறந்த கால நிகழ்ச்சிகளை நினைவுறுத்தியது. பழைய சம்பவங்களை நினைக்கத் தூண்டிற்று" என்று சொல்லுகையில் அவள் குரல் கரகரத்தது. பெருமூச்செறிந்தாள்.

பாரதநாட்டுக் கதைகள்

(ய. மஹாலிங்க சாஸ்திரி)

சமுத்ரசூரன் பதக்கமடைந்த அதிசயம்

முன் ஹர்ஷபுரம் என்ற நகரத்தில் சமுத்ரசூரன் என்று பெயர்கொண்ட ஒரு வியாபாரி இருந்தான். அவன் ஒருசமயம் சுவர்ணத்வீபத்தை நோக்கி வியாபாரத்தின் பொருட்டுக் கப்பலேறிச் செல்லும் பொழுது புயற்காற்று கிளம்பிக் கப்பலைக் கவிழ்த்தது. ஆனால் அச்சமயம் அக்கப்பல் சுவர்ணத்வீபத்துக்குச் சமீபத்தில் வந்துவிட்டபடியால், சமுத்ரசூரன் மெல்ல நீந்தி கரைக்கு வந்துசேர்ந்தான். ஆனால் அவன் பொருள்களெல்லாம் சமுத்திரத்திற்கு இரையாயின. அவன் உயிர் தப்பினது புண்ணியமெனக் கரையேறும்பொழுது, அகஸ்மாத்தாக கரையோரத்தில் சமுத்திரத்தின் அலைகளாலொதுக்கப்பட்ட ஓர் சவத்தைக் கண்டான். அதை உற்றுநோக்கிய அவனுக்கு அச்சவத்தின் இடுப்பில் இறுக்கிக் கட்டப்பட்ட ஒரு முடிப்பு புலப்பட்டது. சமுத்ரசூரன் அதை யவிழ்த்துப் பார்த்தான். அம்முடிப்பில் ஒரு விலை மதிக்கவொண்ணாத ரத்தினப் பதக்கமிருந்தது. அதைக் கண்டு தான் சமுத்ரத்தில் இழந்த தன்னுடைய தனத்தை அற்பமெனக் கருதி மிக்க சந்தோஷத்துடன் அப்பதக்கத்தை மடியில்வைத்துக்கொண்டு பட்டினத்திற்குள் சென்று ஒரு கோவிலுக்கருகாமையிலுள்ள தீர்த்தத்தில் ஸ்நானாதிகளை முடித்துக்கொண்டு கோவிலுக்குள் சென்று ஓர் மண்டபத்தி லயர்ந்து நித்திரை போனான். கொஞ்ச காலத்திற்கெல்லாம் அங்கே நுழைந்த காவல்காரர்கள் இவன் தூங்குவதையும், இவன் மடியில் பிரகாசிக்கும் பதக்கத்தையும் கவனித்து இவனைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர்கள் செய்த சந்தடியில் சமுத்ரசூரன் விழித்துக் கொண்டான். காவற்காரர்கள் அவனைப் பிடித்துக்கொண்டு 'அகப்பட்டான் திருடன்' என்று சொல்லிப்பலாத்காரமாக அரசன் சபைக்கு இழுத்துச் சென்றார்கள். அரசன் அவனை விசாரித்தான். 'அடே, ராஜகுமாரி யணியுமிப்பதக்கம் உன்னிடம் வரக்காரணமென்ன? நீதான் திருடன்.' என்று விரித்த தன்னுடைய கையில் அப்பதக்கத்தை வைத்துக்கொண்டு சமுத்ரசூரனை விரட்டினான். சமுத்ரசூரன் தன் விருத்தாந்தத்தை ஆதியோடந்தமாக நடந்தபடி கூறியும் அரசன் அதை நம்பவில்லை. இந்த சந்தர்ப்பத்தில் ஆகாயத்தில் பறந்து கொண்டிருந்த ஓர் பெரிய கழுகு பேரொளி வீசும் அப்பதக்கத்தை மாம்ஸ பிண்டமென்று மதித்து லபக்கெனப் பாய்ந்து கவ்விக்கொண்டு போய்விட்டது. உடனே அரசன் திடுக்கிட்டெழுந்தான். சபையோர்கள் பரபரப்படைந்தனர். கழுகைப் பின்பற்ற மார்க்கமில்லாமல் அரசன் ஏமாந்த முகத்துடன் வியசனத்திலாழ்ந்தான். அவனுக்கு அப்பொழுது சமுத்ரசூரனின் வார்த்தைகளில் நம்பிக்கையுமுண்டானது. சபையிலிருந்த மந்திரி முதலியோர்களும் அவன் தன் தனத்தைப் பறிகொடுத்தவனென்று அவனிடம் அனுதாபம் காட்டினார்கள். அரசன் தயாள குணமுள்ளவனாதலால், சமுத்ரசூரனிடம் அன்புகொண்டு அவனைத் தேற்றிப் பரிசுகளளித்து, கடல் கடக்கும் வியாபாரக் கப்பல்கள் மூலம் தன் நாட்டிற்குத் திரும்பிச் செல்ல விடை கொடுத்தான். சமுத்ரசூரனும் அரசனை வணங்கி அவனளித்த பரிசுகளுடன் புறப்பட்டுக் கடல்தாண்டித் தன் தேசத்திற்குக்கொஞ்சதூரத்திலுள்ள ஒரு காட்டு மார்க்கமாக வந்துகொண்டிருக்கும் போது இரவு தோன்றியதால் அகஸ்மாத்தாய் கலந்துகொண்ட ஒரு வியாபாரிக் கூட்டத்தின் கூடாரத்தில் தங்கலானான். அன்றிரவு காட்டுக் கள்வர்கள்வந்து கூடாரத்தைத் தாக்கி எல்லோருடைய பொருள்களையும் பறிமுதல் செய்துகொண்டார்கள். சமுத்ரசூரனும் தன் பொருள்களை விட்டுவிட்டு உயிர் தப்பினால் போதுமென்று

(295-ம் பக்கம் பார்க்க)

குடியின் மகிமை!

(ஸ்ரீமதி பி. ராஜலக்ஷ்மி)

"அத்தே, நான் அச்சண்டாளனுக்கு கொடுக்கவேண்டாம் என்றேனே கேட்டையா? கிருஷ்ணாவென்று நம் ராமுவுக்கு கொடுத்திருந்தால் எவ்வளவு நன்றாய் இருந்திருக்கும்? இனி இதைப்பற்றிச் சிந்தித்து என்ன பிரயோஜனம்? இந்த யோசனை முந்தியே இருந்திருக்கவேண்டும். இனி என்ன செய்கிறது?" என்று அத்தையின் புண்பட்டிருந்த மனதை ஒருவாறு தேற்றினான் ராமகிருஷ்ணன்.

"இது தெரியாமல் போச்சேடா. நான் என்ன செய்வேன்? எல்லோரும் பையன் நல்ல அழகு, நல்ல குலம், பணக்காரன், வேண்டிய வேலைக்காரர்கள், பரிசாரகன் உண்டு, ஒரு மாமி என்றும், ஒரு நாத்தி என்றும் ஒருவரும் அதிகாரம் செய்வதற்கில்லை, உன் பெண் ராஜாத்தி மாதிரி இருக்கலாம், பேசாமல் கொடுத்துவிடு, என்றார்களேடா? நான் என்ன செய்வேன்?" என்று அழுதாள் ஜானகி அம்மாள்.

ஜானகி அம்மாளுக்கு ஒரே பெண். அவளுக்கு செல்லம் என்று பெயர். செல்லம் செல்லமாகவே வளர்ந்துவந்தாள். பாவம், ஜானகி அம்மாளின் கணவர் இம்பீரியல் பாங்கியில் எழுபத்தைந்து ரூபாய் சம்பளத்தில்ஒரு குமாஸ்தாவாய்இருந்தார். அவர் திடீரென்று டைபாய்ட் ஜுரத்தில் இறந்துவிட்டார். (இதெல்லாம் ஜானகி அம்மாளுக்குக் கல்யாணம் ஆகி ஒரு வருஷத்திற்குள் ஏற்பட்டுவிட்டது.) ஏதோ ரூ. 5000-க்கு இன்ஷியூர் செய்திருந்தார் சடகோபாசாரியார். அதையும் எடுத்துக்கொண்டு ஜானகி அம்மாவுக்குக் கிட்டின பந்து, தாய், தகப்பன், கூடப்பிறந்தவர்கள் என்று ஒருவரும் இல்லாததினால் தன் ஒரே தமயன் பிள்ளையாகிய ராமகிருஷ்ணனிடம் வந்து சேர்ந்துவிட்டாள். பாவம் செல்லத்துக்கு ஒரு தம்பி, தமயன், அக்கா என்று ஒருவரும் இல்லாததினால் ராமகிருஷ்ணனையே தன் தமயன்போல் பாவித்து வந்தாள். ராமகிருஷ்ணனும் செல்லத்தைத் தன் சகோதரிபோல் பாவித்து மிகவும் மேன்மையாய் வைத்துக்கொண்டிருந்தான்.

செல்லத்துக்கு வயது பதின்மூன்று ஆச்சுது. ஏதோ சாதாரணமாய் ஐந்தாவது கிளாஸ்வரையில் படித்திருந்தாள். "குழந்தைக்கு வயதாகிவிட்டதே" என்று அவளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பாமல் நிறுத்திவிட்டாள் ஜானகி அம்மாள். செல்லம் மிகவும் புத்திசாலி; தமிழ் நன்றாய் வாசிக்கத் தெரியும். பாட்டு நன்றாய்ப் பாடுவாள். செல்லத்துக்குக் கல்யாணமும் ஆய்விட்டது ஒரு மாதிரியாய்.

செல்லத்தின் கணவன் ஒரு மிராசுதாரின் ஜேஷ்ட புதல்வன். இவன் எப். ஏ. வரையிலும் வாசித்தான். அப்புறம் படிப்பு ஓடவில்லை. தகப்பனார் எவ்வளவோ சொல்லியும் படிக்க மனமில்லாமல் பணம் கட்டிக் கட்டிப் பரீக்ஷையில் தோல்வி அடைந்து கொண்டே வந்தான். தகப்பனார் பார்த்தார்; இனிப் பிரயோசனமில்லை என்று விட்டுவிட்டார்.

பிள்ளைக்கோ சகவாச தோஷம்; கெட்ட சிநேகிதம், குடிகாரர்களிடம் தான் சதா பழக்கம். பாவம், தாயாரும் தகப்பனாரும் எவ்வளவோ சொல்லியும் பார்த்தார்கள். கேட்டதாய்க் காணோம். தாயார் இதே விசாரத்தில் இவ்வுலகை விட்டு அகன்றாள். மிராசுதாரும் நாளுக்குநாள் பிள்ளையின் கவலையால் குன்றிப்போய்க் கொண்டிருந்தார். கடைசியில் அவருக்கு ஓர் யோசனை பிறந்தது. தன் பிள்ளையைத் தனியே சம்சாரம் செய்யும்படி வைத்தால் ஒருவேளை புத்தி வரலாம். குடும்பத்தின் கஷ்டமும் பணத்தின் அருமையும் தெரியும் என்று எண்ணினார்.

ஆனால், அது நேர்விரோதமாக முடியுமென்று அவருக்கு எப்படித் தெரியும்? பணத்தின் அருமை எல்லோருக்கும்

தெரியுமா? கஷ்டப்பட்டுச் சம்பாதிப்பவர்களுக்கல்லவோ பணத்தின் அருமை தெரியும்? ஒரு தனி வீடும், தகுந்த வேலையாட்களும், ஒரு வண்டியும், ரொக்கம் ரூ. 10,000மும் கொடுத்து தனி சம்சாரம் ஏற்படுத்தி விட்டார் மிராசுதார். கேட்க வேண்டுமா பிள்ளையாண்டானுக்கு? இவ்வித சம்பவத்தையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு இன்னும் குஷி பிறந்துவிட்டது. பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல் ஆய்விட்டது. இரவெல்லாம் வீட்டில் சிநேகிதர்கள் தான். குடி, கூச்சல், அமர்க்களம், வீட்டில் சமுசாரம் ஆச்சுது, இரண்டு குழந்தைகள் ஆச்சுது. குடித்து குடித்து ரூ. 10,000யும் அழித்தாய் விட்டது. செல்லம் போட்டுக்கொண்டிருந்த ஒன்றிரண்டு நகைகளையும் விற்றாய் விட்டது. ஏக கடன். தினம் வாசலில் கடன்காரர்கள் உபத்திரவம். இந்த ஸ்திதிக்கும் வந்துவிட்டான்.

பாவம், செல்லம் என்ன செய்வாள்? கணவனது குடியைப் பார்த்து வருந்துவாளா? அல்லது இந்த கடன்காரர்களுடைய தொந்தரவுக்காக அவஸ்தைப்படுவாளா? மெள்ள கணவனிடம் போய், "நமக்கு இரண்டு குழந்தைகள் இருக்கிறார்களே, இப்படி வீட்டையும் குழந்தைகளையும் கவனிக்காமலிருந்தால் எப்படி?" என்பாள் அப் பேதை. அவன் குடிவெறியால் "இந்தா நீயும் குடி, உன் குழந்தைகளுக்குக் கொடு இதை" என்பான் கையில் புட்டியை வைத்துக்கொண்டு. 'ராமா, ராமா'வென்று தலையில் கையை வைத்துக்கொண்டே போய் விடுவாள். குழந்தைகளுக்கோ நல்ல சாப்பாடு கிடையாது, பால் கிடையாது. பால் காரியை பால், கேட்டால் "கொடுக்க வேண்டிய ரூபாயைக் கொடும்மா, பால் கொடுக்கிறேன்" என்பாள். மாமனாரிடம் போகலாம் என்றால், அவரோ தன் கணவனால் வீடு போய் வாசல் போய் கிடக்கிறார். அப்படி அவரிடம் போனால்கூட "எல்லாம் உன் அகமுடையானால் அல்லவோ வந்தது எனக்குக் கதி? நான் என்ன செய்ய முடியும்?" என்றால் என்ன செய்வது என்று எண்ணி விதியே என்று நாலு பட்டினி ஐந்து பட்டினி கிடப்பாள். ஆனால், அக் குழந்தைகளால் அப்படி இருக்க முடியுமா? அக்கம் பக்கம் சிநேகிதர்கள் யாராகிலும் பாவம் என்று அந்தக் குழந்தைகளுக்கு ஏதாவது தின்பதற்குக் கொடுத்தால் உண்டு. அவ்வளவு நிலைமைக்கும் வந்தாய் விட்டது.

ஒருநாள் தன் கைக்குழந்தைக்குச் சுரம் வந்துவிட்டது. ஏதோ சாதாரண சுரம் என்று இருந்து விட்டாள். ஆனால் அது இருக்க இருக்க மிகவும் அதிகமாய்ப் போய்விட்டது. அப்பொழுது தன் கணவனிடம் போய் "நம் நீலாவுக்கு சுரம் அதிகமாய் இருக்கிறது; டாக்டரைக் கூப்பிட்டுக் கொண்டு வாருங்களேன்" என்று மிகவும் பரிதாப தொனியில் கெஞ்சினாள். அதற்கு அப்பாதகன் "சுரம் வந்தால் உடனே டாக்டர் வேணுமோ? நீ குழந்தையாயிருக்கும்பொழுது உனக்கு எத்தனை டாக்டர்கள் வந்தார்கள்? சுரம் வந்தால் என்ன இரண்டுநாள் அடித்துவிட்டு தானே போகிறது." என்று கொஞ்சமேனும் இரக்கமின்றிக் கசறிக்கொண்டான். பாவம் செல்லம் அழுதவண்ணம் உடனே திரும்பிப்போய்விட்டாள். ஆனால் அவள் விம்மி விம்மி அழுதுகொண்டிருந்தது அவன் காதில் படாமலில்லை. தான் இருந்த நிலைமையையும், இப்பொழுது இருக்கும் நிலைமையையும் நினைத்து நினைத்துத் துக்கித்தாள். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் "அடியே, நீ இப்படி அழுதுகொண்டிருந்தையானால், ஒரு மனிதன் எப்படி தூங்குவான் என்று நினைக்கிறாய்? உன் அழுகையையாவது நிறுத்து, அல்லது உன் குழந்தையையாவது எடுத்துக்கொண்டு வெளித்திண்ணையில் போய்ப் படு. நான் தூங்கவேண்டும்," என்று கூச்சலிட்டான். இரவு மணி ஒன்பது; நல்ல இருட்டு. மின்னலும் மழையுமாய் இருந்தது. மனிதர்களுக்குக் கஷ்டம் வந்தால் எல்லாம் ஒன்று சேர்ந்து வரும் என்பார்களல்லவா? இந்த மழையில் டாக்டரை யார் கூப்பிடப் போவார்கள்? அப்படி டாக்டர் வந்தாலும் காசு கொடுக்க வேண்டாமா? அப்படி சும்மாதான் வந்தாலும் ரூபாயில்லாமல் மருந்து கிடைக்

குமா? எவ்வளவென்று பொறுப்பாள்? எல்லாம்போய்விட்டது. எதற்கும் இவ்வளவு துக்கப்படவில்லை. ஆனால், வயிற்றிற் பிறந்த குழந்தையல்லவா? தாய்க்குத் தன் குழந்தையைவிட அருமையானது எது? பாவம், மனம் கேட்க்வில்லை. மறுபடியும் கணவனிடம் போய் "ஐயோ, குழந்தை மிகவும் அவஸ்தைப்படுகிறதே" என்றாள். அதை அவன் காதில்கூடப்போட்டுக்கொள்ளவில்லை. அப்பொழுது ஒரு யோசனை பிறந்தது. உடனே ஓடிப்போய் பெட்டியைத் திறந்தாள். அவளுக்கு கபக் என்றது. ஐயோவென்று வாய்விட்டலறினாள். தன் தாயார் கொடுத்த பத்து ரூபாய் நோட்டு தன் பெட்டியிலிருந்து எடுக்கப்பட்டிருந்தது. பாவம் என்ன செய்வாள். அவ்வேழைப் பெண்? கைக்குழந்தைக்கோ அவஸ்தை; பெரிய பெண்ணோ பசியினால் அழுகிறது. வீட்டிலோ ஒன்றும் கிடையாது. அகமுடையான் குடித்து விழுந்து கிடக்கிறான். ஒரு ஸதிரீக்கு இதைவிடத் துர்ப்பாக்கியம் வேறு என்ன வேண்டும்? அதிகம் விவரிக்கவேண்டியதில்லை. அச்சமயம் அவனது நினைவு அவனுக்கில்லாமல் இருந்தது. "ஐயோ! தெய்வமே! உனக்குக் கண் இல்லையா?" என்று வருந்தினாள். தெய்வத்தைதான் அவள் அச்சமயத்தில் நொந்துகொண்டாள். ஆனால் அவள் விதி அவளை விடவில்லை. கணவனிடத்தல் போய் பயத்துடன் "என் பெட்டியில் என் தாயார் கொடுத்த பத்து ரூபாய் நோட்டு வைத்திருந்தேன். பெட்டி திறந்துகிடக்கிறது. நோட்டைக் காணோம்" என்றாள். அவ்வளவுதான். விதியை வெல்வார் யார்? அவளுக்கு ஏழரைநாட்டுச் சனியன் பூர்த்தியாய்ப் பிடித்துக்கொண்டிருந்ததுபோலும்! உடனே எழுந்தான் கணவன்; குடிவேகம் தலைகால் தெரியவில்லை அவனுக்கு. "யாரடி எடுத்தான் உன் ரூபாயை? நானடி? நீதானேடி என் ரூபாயை எல்லாம் ஒழித்தாய்? நடடி என் வீட்டை விட்டு. இது யார் வீடு தெரியுமா?" என்று சரமாரியாய்ப் பொழிந்து அவளை ஒரு தள்ளு தள்ளிவிட்டு, "எல்லாம் அக் குழந்தையால் அல்லவா வந்தது?" என்று சொல்லிக்கொண்டே அக்குழந்தை யிருக்குமிடத்திற்கு ஓடினான். பெற்ற வயிறல்லவா? அதிலும் தாய். தாயினுடைய மகிமை என்னென்று சொல்லுவேன். தாயைவிடச் சிறந்த தெய்வம் நாம் காண்பதரிதன்றோ? உலகமே தாயால் அல்லவோ போஷிக்கப்படுகிறது. "ஐயோ, வேண்டாம், வேண்டாம். என் மணியை ஒன்றும் செய்யாதீர்கள். அது வாயில்லாப் பூச்சி. உடம்பு தெரியாமல் படுத்து கிடக்கிறது" என்று சொல்லிக்கொண்டே ஓடினாள். குடிகாரனுக்கு, நியாயம் உண்டா? தயவு உண்டா? உறவு உண்டா? குழந்தையைக் கட்டிலிலிருந்து உதைத்து கீழே தள்ளிவிட்டான். அழுதாள், புரண்டாள்.

என்னதான் அழுதால் என்ன போன குழந்தை திரும்பி வருமா?

(292-ம் பக்கத் தொடர்ச்சி)

விரைந்தோடி அப்பாலுள்ள ஓர் பெரும் ஆலமரத்தின் கிளையில் இரவு பூராவும் பதுங்கியிருந்தான். விடிந்ததும் சுற்றுமுற்றும் நோக்கிய அவன் கண்களுக்கு அந்தோ, என்ன தென்பட்டதென்று நினைக்கிறீர்கள்? அவ்வாலமரத்தின் அடிக்கிளையில் ஒரு பெரிதான கழுகுக்கூட்டின் உள்ளிருந்து இளஞ்சூரியனுடைய கதிர்களின் ஸ்பரிசத்தால் ஒளிவீசும் நவரத்னக் குவியல்களைக் கண்டான். அதன் மத்தியில் அதே பதக்கமும். ஆசா! இதுவோ விதியின் வழி என்று அவ் விரத்னங்களனைத்தையும் வாரிக் கட்டிக்கொண்டு கீழிறங்கித் தன் நகரம் போய்ச் சேர்ந்தான் ஸமுத்ரசூரன்.

மனம்போல மாங்கல்யம்

(ஸ்ரீமதி பார்வதி சுப்ரமணியம்)

மணியின் தகப்பனர் ஒரு பெரிய மிராசுதார். ஏராளமான நஞ்சை புஞ்சையுடன் கை ரொக்கமும் வைத்துக்கொண்டு கொடுக்கல் வாங்கலும் செய்து வந்தார். அவர் மணிக்கு, அறிவு விசாலமடைவதற்கான கல்வியும், விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கு உதவும்படியான கல்வியும் கற்பித்திருந்தார்.

அவன் படிப்பு ஒரு விதமாய் முடிந்ததும் அவனை அருகில் அழைத்து அவர் சொன்னதாவது: "அப்பா நீயும் இனிமேல் குடும்பத்தில் பொறுப்பு ஏற்றுக்கொள்ளவேணும்; அவரவர்கள் உழைப்பில் கிடைக்கும் உணவுக்கு ருசியும் மேன்மையும் அதிகம். ஆனல் அப்படி உழைப்பதற்கு 'தன்னுடையது என்றால் உண்ணியும் உழுமாம்' என்றபடி பொறுப்புக் குட்பட்டாலொழிய கடமை தோன்றுது. தாயும் பிள்ளையுமானலும் வாயும் வயிறும் வேறுதான். ஆகையால் நமக்கு மேற்கே படிஞாயிறில் உள்ள சொத்துக்களை உனக்குக் கொடுக்கிறேன். அதை இதுவரை நான் போய்க் கவனிக்க முடியவில்லை. ஒரு காரியஸ்தனைச் சம்பளத்துக்கு அமர்த்தி நிர்வகித்து வந்தேன். நீ போய் ஒப்புக்கொண்டால் அவன் சம்பளமும் குடும்பத்துக்குமீறும், உனக்கும் ஒரு தொழில் ஏற்படும்" என்று தெரிவித்தார்.

மணியின் தாயார் நல்ல விவேகி. அவள் இந்த ஏற்பாட்டை அறிந்து சந்தோஷமே அடைந்தாள். சில தாய்மாரைப் போல "நம் குழந்தை ஏன் பொறுப்பெடுத்து உழைக்கவேணும்? காரியஸ்தன் வேலையை நம் மகன் செய்வானேன்? குழந்தை வீட்டைவிட்டு நம்மைப் பிரிந்து இருப்பானேன்?" என்றெல்லாம் அசட்டுவாதம் செய்யாமல் அவள் மணியை ஆசீர்வதித்து அனுப்பினள். மணி படிஞாயிறு போய்ச் சேர்ந்தான். காரியஸ்தனிடம் தன் தகப்பனர் ஏற்பாட்டைத் தெரிவித்தான். அவனைக்கொண்டு அவ்விடம் தன் நிலபுலங்களைக் காட்டச்சொல்லித் தெரிந்துகொண்டான். எவ்வளவு தான் நம்பிக்கையுடையவனும் கெட்டிக்காரனுயாகவும் இருந்தாலும், கூலிக்கு வேலை செய்பவன் சொத்துக்கு உடையவனைப்போல் சொத்தைக் கவனிக்க முடியாது. மணி அந்த காரியஸ்தனுக்கு அதிக வருத்தம் ஏற்படாத வண்ணம் அவன் இதுவரை நிர்வாகித்ததைப் பாராட்டி, அவனுக்கு வெகுமதியும் அளித்து அவனை விலக்கினன். பிறகு அவனல் ஏற்பட்டிருந்த ஊழல்களையும் நிவர்த்தி செய்துகொண்டான்.

மணி தமிழ் வேதமாகிய குறளை படித்திருந்தான் "செல்லான் கிழவன் இருப்பின் நிலம் புலந்து இல்லாளின் ஊடிவிடும்" என்பதை உணர்ந்தவன். தினந்தோறும் அதிகாலையில் வயல் வெளிகளைச் சுற்றிக் கவனித்து வந்தான்.

ஒருநாள் அவ்வாறு கோவி வருகையில், இவன் பூமிக்கு அடுத்த பூமியில் ஒரு பரிதாபமான காட்சியைக் கண்டான். அவ்வருஷம் பருவ மழை பெய்யாமல் பூமி விளைவு இல்லை. அதனல் அந்த பூமியை வாரத்துக்கு எடுத்திருந்த குடியானவர்கள் வாரம் கட்டக்கூட இல்லை. அதனல் சர்க்கார் சேவகர்கள் அவர்களைக் குடியிருப்பிலிருந்து வெளிப்படுத்த பண்டம் பாடிகளையும் ஏலம் கூறிக்கொண் டிருந்தார்கள். இவ்வாறு பறிமுதல் நடக்கவே, குடியானவர்களும் அவர்கள் பெண்டு பிள்ளைகளும் பரிதாபமாய்ப் புலம்பிக்கொண் டிருந்தார்கள்.

இதைக் காண மணிக்குத் தாள வில்லை. தன் சொந்த செலவுக்கும் சேமிப்புக்குமாக வைத்திருந்த நெல்லையும் பொருளை

யும் செலுத்தி அந்த ஜனங்களைக் காப்பாற்றினன். அதனால் மணியிடம் அவர்களுக்கு அதிக அன்பு ஏற்பட்டது. மேலும் தொடர்ந்தாப்போல் இரண்டு வருஷங்களுக்கு விளைவு இல்லாமல் போய் விட்டது. மணி தன் சொந்தத்திற்கு சேர்த்து வைத்திருந்த நெல்லையும், பொருளையும் மற்றவர்கள் வரிக்குச் செலுத்தி விட்டதனால் இப்போது தனக்கே வரி செலுத்தக்கூடாத நிலைமைக்கு வந்து விட்டான். அவன் தான் குடியிருந்த மச்சு வீட்டை விற்று, வரி செலுத்தும்படியாயிற்று. அதனால் அவனுடைய வேலைக்காரர்கள் நடுவில் அவர்கள் போலத் தானும் வாழும்படியான நிலைமைக்கு வந்துவிட்டான்.

அவ்வூரில் சுந்தரம் என்று ஒருவன் இருந்தான். அவன் சில வருஷங்களுக்கு முன் சம்பாதித்து வருவதாகச் சொல்லி அவன் மனைவி மீனாட்சியையும், மகள் வள்ளியையும் ஊரில் விட்டுப் போனான். பிறகு அவனைப்பற்றிய தகவலே தெரியாமலிருந்தது. மீனாட்சி உளரில் நாலு இடத்தில் வேலைசெய்து தன்னையும் மகளையும் போஷித்து வந்தாள. இப்பொழுது எங்கும் பஞ்சம் ஏற்படவே. ஒருவரும் அவளை வேலைக்கு அமர்த்தி, கூலிதரக் கூடவில்லை. அதனால் தாயும் மகளும் அடைந்த துன்பத்தை மணி அறிந்தான். அவன் அவர்களைத் தன் வீட்டிலேயே வேலைக்கு அமர்த்திக் கொண்டான். மீனாட்சிக்கு அந்த பஞ்ச காலத்தில் ஒரு அன்பான எஜமானனும், வேலை செய்து மானமாய் பிழைக்க ஒருவழியும் ஏற்பட்டதில் மிகுந்த சந்தோஷம். அவளும் வள்ளியுமாக வீடுவாசல், கொட்டில்களையும் பண்டம் பாத்திரங்களையும் சுத்தமாய் வைத்துக்கொண்டு, மணிக்கு வேண்டிய ஆகாராதிகளையும் பக்குவமாய்த் தயார் செய்து அளித்துகொண்டு ஒழுங்காய் நடந்து வந்தார்கள்.

அது சமயம் மணியின் தகப்பனர் அவன் என்ன நிலைமையிலிருக்கிறான் என்று அறிய படிஞாயிறு வந்தார். நேரே தங்களுடையதா யிருந்த மச்சு வீட்டுக்குப் போனார். வீட்டில் வேற்று மனிதர் இருப்பதைக் கண்டு அவர்களிடம் தன் மகனைப் பற்றி விசாரித்தார். அவர்கள், வீடு விற்கப்பட்டுத் தாங்கள் வாங்கி அனுபவித்து வருவதையும், பையன் நிலைமையையும் தெரிவித்தார்கள். அங்கிருந்து அவர் மணி இருக்கும் இடத்திற்கு வந்து பார்த்தபோது தங்கள் வேலையாட்கள் குடியிருப்பு நடுவில் அவர்களைப்போல் அவனும் வசித்துவரும் நிலைமையைக் கண்டு வருத்தமும் கோபமும் கொண்டு அவனை இகழ்ந்தார்.

அதற்கு மணி, தன்னைச் சுற்றியுள்ள ஜனங்கள் கஷ்டத்திலிருக்கும்போது தான் மட்டும் மச்சு வீட்டில் வாழ்ந்து சுகமடைய விரும்பவில்லை என்றும், தான் இப்போது வாழும் நிலைமையில் மனது சாந்தியாயிருப்பதாயும் தெரிவித்தான். அதன்மேல் அவன் தகப்பன், அது அவன் விதி என்று வெறுத்து ஊர் திரும்பினர்.

மீனாட்சியின்புருஷன்சுந்தரம் கொழும்பு பினாங்கு, சிங்கப்பூர், பர்மா என்னுமிடங்களில் காப்பித்தோட்டம் தேயிலைத்தோட்டம் ரப்பர் தோட்டம் முதலியவைகளில் உழைத்துக் கடைசியில் அதிருஷ்டவசமாக ஒரு கருணை நிறைந்த தனவந்தரிடம் வேலைக்கு அமர்ந்தான். அவர் இந்தியாவை விட்டு பொருள்தேட அயல்நாடு சென்று அநேக வருடங்களாகிவிட்டது. அவருக்கு உற்றார் உறவினர் யாருமில்லை. சுந்தரம் தன்னிடம் உண்மையாய் உழைப்பதை அவர் அறிந்தார். அவனிடம் அபிமானமும்கொண்டார். அவருக்கு இருந்த ஏராளமான சொத்தில் சொந்த தேசம் விட்டு அயல் நாடு சென்று பிழைப்புக்காக அலைந்து தவிக்கும் ஜனங்களுக்கு உதவுவதற்கு சரிபாதியும், சுந்தரத்துக்கு மற்றொரு பாதியும் எழுதிவைத்துவிட்டு இறந்துபோனர்.

சொத்தின் நிர்வாகிகள் இதை சுந்தரத்துக்குத் தெரிவித்தார்கள் சுந்தரம் தன் எஜமானன் இறந்ததில் மனமுடைந்து இருந்தான். அவன் அவர் செய்து வைத்துப்போன விஷயத்தை அறிந்ததும்

அவர் கருணையைப் பாராட்டிக் கடவுளைத் துதித்தான். தான் அநேக வருஷங்களுக்கு முன் விட்டுவந்த மனைவியையும் மகளையும் காண ஆவல்கொண்டான். சொத்து கைவசமானதும் 'கப்பல் செலவுக்கு வழி என்ன' என்ற கவலை விட்டு ஊர்வந்து சேர்ந்தான். தன் மனைவி மக்களைப்பற்றி விசாரித்தான். பஞ்சக் கொடுமையால் அவர்கள் பட்ட கஷ்டத்தையும் மணியின் கருணையையும், மீனாட்சியும் வள்ளியும் மணியின் வீட்டில் வேலை செய்து வருவதையும் தெரிவித்தார்கள்.

சுந்தரம் இப்பொழுது ஏராளமான சொத்துக்கு உரியவனாயிருந்தாலும், வெளிக்குக் காட்டாமல் ஏழ்மைக் கோலத்துடனே மணியின் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். அவன் விட்டுச்சென்றபோது வள்ளி சிறு குழந்தையாகையால் வீட்டு வாசலில் நின்ற வள்ளிக்கு சுந்தரத்தைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. அது சமயம் வெளியில் வந்த மீனாட்சி சுந்தரத்தைக் கண்டு அடைந்த ஆனந்தத்தை சொல்லி முடியாது. ஆனால் அந்த சந்தோஷத்தோடு அவளுக்கு ஒரு கவலையும் உண்டாகிவிட்டது. "புருஷன் திரும்பி வந்துவிட்டான். அவன் வேலை தேடி வேறு எங்காவது செல்வான். மனைவியின் கடமைப்படி அவனுக்கு உதவியாயிருக்க அவன் போகுமிடத்துக்கு நாம் போகவேணும். பஞ்சகாலத்தில் நம்மைக் காப்பாற்றின தயாளுவுக்கு ஆகாரம் தயாரிக்கவும், வீட்டைக் கவனிக்கவும் யாருமில்லாமல் விட்டுப் போக வேணுமே" என்று நினைத்தாள். சுந்தரத்தையும் வீட்டில் வேலைக்கு அமர்த்திக்கொள்ள மணியிடம் கேட்போமென்றால் மணியின் தற்கால நிலைமையில் அது முடியாத காரியம் என்றெல்லாம் கவலைப்பட்டு அதைத் தன் கணவனிடம் தெரிவித்தாள். சுந்தரம் அப்பொழுது தன் உண்மை நிலையைத் தெரிவிக்கவில்லை.

மாலை மணி வீட்டுக்கு வந்ததும், சுந்தரம் தன் மனைவியுடன் தனக்கும் தங்குவதற்கு வீட்டில் இடமளிக்கும்படி கேட்டுக்கொண்டான். மணியும் அவன் இஷ்டம்போல் அதேவீட்டில் இருந்துகொள்ளும்படி உத்தரவுகொடுத்தான்.

சுந்தரம் கொஞ்சகாலம் சாப்பாடு நேரம் போக மற்ற சமயங்களில் வெளியில்போய் வந்துகொண்டிருந்தான். ஏதோ வேலைக்கு அலைந்துகொண்டிருப்பதாக மீனாட்சியும் மணியும் எண்ணியிருந்தார்கள். சுந்தரம் வீட்டில் தங்கிய சமயங்களில் மணியின் நடத்தையைக் கவனித்து வந்தான். மணியின் பெருந்தன்மையையும் வேலைக்காரர்கள் தானே என்ற அலட்சிய புத்தியில்லாமல் தன் மனைவியிடமும் மகளிடமும் தன்னிடமும் அவன் காட்டும் அன்பையும் கண்டுகளித்தான். அதோடு வள்ளி மணி இவர்கள் நடுவில் காதல் பூக்கத்தொடங்கியிருப்பதையும் அறிந்து கொண்டான்.

சுந்தரம், மீனாட்சியிடம் கொஞ்ச நாட்களுக்குத் தனக்கு வெளியூரில் ஜோலியிருப்பதாய்ச் சொல்லிப் புறப்பட்டான். அவன் நேரே மணியின் தகப்பனாரிடம் சென்று தான் சீமைபோய் சம்பாதித்து வந்திருப்பதாயும், அவர் மகனுக்குத் தன் மகளைக்கொடுத்து ஒரு மச்சு வீடும் கொடுக்க நினைப்பதாயும் சொன்னான்.

வீட்டோடு பெண் வருவதை அறிந்ததும் மணியின் சம்மதத்தைக் கூடக்கேளாமல் வாக்குக்கொடுத்துத் தாம்பூலம் மாற்றிக்கொண்டார் மணியின் தகப்பனார்.

சுந்தரம் மணியின் தகப்பனார் இருந்த ஊரிலேயே கல்யாணத்தை நடத்துவதாகத் தெரிவித்தான். ஊர் போய்த் தன் மனைவியையும் மகளையும் அழைத்து வருவதாயும் அன்றைக்கு பதினைந்தாம் நாள் கல்யாணத்தை நடத்தி விடலாமென்றும் தெரிவித்தான்.

மணியின் க்ஷேமலாபங்களைக்கூட இதுவரை விசாரியாதிருந்த அவன் தகப்பனார், தன் ஊரிலேயே ஒரு பெண்ணை நிச்சயம் செய்திருப்பதாயும் அன்றைக்கு பதினைந்தாம் நாள் முகூர்த்தமென்றும் உடனே வந்து சேரவேண்டியது என்றும் மணிக்குத் தகவல் எழுதிவிட்டார்.

கடிதம் கிடைத்தது முதல் மணி ஒருவாறாய் இருந்தான். மீனாட்சி காரணம் கேட்டபோது கடிதத்தின் விவரம் சொன்னான். உலகத்திலுள்ள அநேகம் தாய்மாரைப் போலவே மீனாட்சியும் தன் முன்பாகவே நடந்துவரும் வள்ளி மணியின் காதற்பயிரின் வளர்ச்சியை அறியாதவளாயிருந்தாள். அதனால் அவளுக்கு மணியின் கவலைக்குக் காரணம் புலப்படவில்லை. ஆனால், அது தெரிந்த வள்ளியின் மன நிலைமை விவரிக்கத் தரமல்ல.

கடிதம் கிடைத்த மறுநாள் சுந்தரம் படி ஞாயிறு திரும்பித் தனக்கு வெளியூரில் பிழைப்பு கிடைத்திருப்பதால் மனைவி மகளை அழைத்துப்போக உத்திரவு கொடுக்கும்படி மணியிடம் கேட்டான். தடை ஒன்றும் சொல்லுவதற்கின்றி மணி அவர்களை அனுப்பிவிட்டான். மீனாட்சிக்கு பஞ்சத்தில் காப்பாற்றின வள்ளலை விட்டுப் போகிறோமே என்ற விசனம் உண்டு. ஆனால் அதுசமயம் வள்ளியும் மணியும் அடைந்த துன்பம் எழுதத் தரமல்ல.

இரண்டொரு தினங்களில் சுந்தரத்தினிடமிருந்து வள்ளிக்கு விவாகம் நிச்சயித்திருப்பதாயும், மணி கட்டாயம்வரவேண்டுமென்றும் அழைப்பு வந்தது. தன் தகப்பனார் ஊரில், தன் தகப்பனார் எழுதியிருந்த அதே முகூர்த்தமும் கண்டிருந்தது.

தகப்பனார் கடிதம் வந்ததிலிருந்து தன்னைக் கலந்துகொள்ளாமல் தனக்கு விவாகம் நிச்சயித்ததில் வருத்தம் அடைந்து தனக்கு விவாகம் வேண்டாமென்று தகப்பனுருக்குத் தெரிவித்துவிட இருந்தான். மணி சுந்தரம் கடிதம் கிடைத்ததும் "என் சொந்த ஊர் பார்த்தும்நாளாயிற்று. வள்ளி நமக்குக் கிடைக்காவிட்டாலும் அவளை அடையக் கொடுத்து வைத்திருப்பவனை யாவது பார்த்து வருவோம். தகப்பனரிடமும் நேரில் நம் அபிப்ராயத்தைத் தெரிவித்துவிடுவோம்" என்று மனத்தைச் சமாதானப்படுத்திக்கொண்டு மணி புறப்பட்டு அவன் தகப்பனர் ஊருக்கு சென்றான்.

வீட்டுக்குள் நுழைந்து தாய்தந்தையரை வணங்கிய பின்புதான் மணிக்கு தனக்கு நிச்சயித்திருக்கும் பெண் யாரென்பது தெரிய வந்தது. சுந்தரம், மணி வீட்டில் தங்கி வெளியில் வேலை தேடப் போவதாகச் சொன்ன நாட்களில் ஒரு நல்ல வக்கீலை அமர்த்தி அக்கம் பக்கத்தில் கடனில் மூழ்க இருக்கும் குடும்பங்களின் நிலங்களை எல்லாம் வாங்கி வள்ளி-மணி இரண்டு பேர் பேரிலுமாக எழுதிவைத்து, படி ஞாயிறிலும் அவர்கள் மச்சு வீட்டை வாங்கினவரிடமே இருந்து திரும்பி வீட்டை வாங்கி அதையும் மணி பேருக்கு எழுதி வைத்திருந்தான்.

இவ்வளவும் கல்யாணத்தின்போதுதான் எல்லாருக்கும் தெரிய வந்தது. கல்யாணமும் வெகு விமரிசையாய் நடந்தது. சொத்தும் வீடும் பெண்ணும் கிடைத்ததில் மணியின் பெற்றோர் அடைந்த சந்தோஷமோ, தன் மனைவி மக்களிடம் ஆபத்துக் காலத்தில் இரக்கம் காட்டின புண்யவானுக்குப் பதில் செய்யக் கொடுத்து வைத்ததை எண்ணிச் சுந்தரம் அடைந்த சந்தோஷமோ, தன்னை அன்புடன் ஆதரித்த வள்ளலே தனக்கு மருமகனாகக் கிடைத்ததில் மீனாட்சி அடைந்த சந்தோஷமோ 'வள்ளியே மணிக்கும், மணியே வள்ளிக்கும்' கிடைத்ததில் அத்தம்பதிகள் அடைந்த ஆனந்தமோ இவ்வளவு அவ்வளவு என்று சொல்லத்தரமில்லை.

விடியற்காலை

(டி. வேங்கடராமன்)

இரவு போய்க்கொண்டிருக்கிறது. பகல் அதை துரத்துவது போல் பின் தொடருகிறது. இரவிலுதித்த சந்திரன் பகலிடம் சமாதானம் செய்து கொண்டவன்போல் தன் கிரணங்களை இழக்கிறான். உதய தாரைச் சுடர் கிழக்கே பிரகாசிக்கிறது. ஆனால் என்ன? இன்னும் இங்கே பொழுது விடியாததுபோல் இருளாகவேயிருக்கின்றதே!

மரங்கள் அடர்த்தியாக வளர்ந்திருக்கின்றன. அவைகளுடைய பெரிய, பிரம்மாண்டமான கிளைகள் நான்கு பக்கங்களிலும் பரவி இருக்கின்றன. அவைகளின்மேல் வசித்து வரும் குருவிகள், பெரிய பட்சிகள் ‘கீச், கீச்’ என்றும், ‘குர், குர்’ என்றும் கத்துகின்றன. குரங்குகள் ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரத்திற்குத் தாவுகின்றன.

கையில் கிண்டி போன்ற பாத்திரத்தையுடையவரும், புலித்தோல் தரிப்பவரும், நீண்டு வளர்ந்த தாடியையுடையவரும், தலையில் சேர்த்துக் கட்டப்பட்ட மயிர்களின் சமூகங்களாலான ஜடையையுடையவருமான, அந்த ‘பெரியார்’ எங்கே செல்கிறார்?

காலையில் புதிதாகப் பூத்த வெண் தாமரைப் புஷ்பங்களையுடையதும், நான்கு பக்கங்களிலும் விஸ்தாரமான பூங்காவனத்தால், மகிழும் மணமுள்ள பாரிஜாத புஷ்பத்தின் வாசனையால் நிரம்பிய காற்றையுடையதும், அருகிலுள்ள மலையிலிருந்து விழும் குளிர்ச்சியான நீர் வீழ்ச்சியையுடையதுமான தடாகத்தின் சோபை தான் என்ன!

இரவு பனியால் சூழப்பட்டதும், மழை பெய்து ஓய்ந்த வெண்மையான மேகங்களையுடையதும், சமுத்திரம்போல் நீண்டதுமான ஆகாயம், காலையில் தங்கள் இருப்பிடங்களிலிருந்து, இரை தேடி வரும் கொக்குகளின் கூட்டம்போல் விளங்குகிறது.

ஏர் கலப்பையோடு வேளாளர்களாகிய சேனாதிபதிகளையுடையவனும், ஏற்றமரத்திலேறி தண்ணீர் பாய்ச்சுபவர்களின் பாட்டுகளினால் கட்டியம் சொல்லப்படுபவனும், பொற்கிரணங்களினால் பிரகாசிப்பவனும், சர்வ லோக உபகாரியுமான சூரியன், தன்னுடைய கிரணங்களை வெளியில் நீட்டியவனாய், தனக்கு விரோதியான இருள் போய் விட்டானா என்று ஒளிந்து கொண்டு பார்ப்பவன்போல், கிழக்குக் கோடியில் மலைகளினிடையில் தோன்றினான்.



அனுதாபம்

[என். நாராயணன், பி. ஏ.]

பரம சிவத்திற்குப் பைத்தியம் பிடித்து விடும்போ லிருந்தது. பாவம்! சாது மனுஷ்யன் தான். போதாத காலத்தின் பலன் அப்பாவியான அவனைப் பயங்கரமான பாதைக்குக் கொண்டுபோய் விட்டது. இனி அவன் மானம் தப்பி வாழ்வதும் சந்தேகந்தான். ஒரு வேளை, ஜெயிலுக்கே போகும்படி ஆய்விடுமோ, என்னவோ? 'ஜெயில்' என்ற எண்ணம் உண்டானவுடன், அவனையுமறியாமல் பரம சிவத்தின் தேகம் நடுங்கிற்று. பிசாசைக் கண்டவனைப்போல், 'ஹா' என்று தன்னையுமறியாமல் வீறிட்டுக் கத்திவிட்டான். நல்ல வேளையாக அவனை ஒருவரும் கவனிக்கவில்லை. கவலை மனதைக் கலக்க, வீட்டை நோக்கி நடந்துகொண்டிருந்தான்.

"ஜயலட்சுமி ஜனோபகார பாங்கி"யில் பரமசிவம் ஒரு குமாஸ்தாவாக விருந்து, இப்பொழுது 'காஷியர்' வேலை பார்த்து வந்தான். ஆயிரக் கணக்கில் தினந்தோறும் பணம் அவன் கைகளில் புரண்டது. எனவே, அதுவே அவனுக்கு ஒருதூண்டுகோலாகிவிட்டது. அவசரச் செலவுக்கு வேண்டியபொழுது, பாங்கிப் பணத்தை எடுத்துப் பிறகு, பணம் வந்தவுடன், கணக்குகளைச் சரிப்படுத்திக்கொண்டிருந்ததோடல்லாமல், இப்பொழுது கொஞ்சம் 'தாராள'மாகவே பாங்கியின் பணத்தை எடுத்துப் புழங்கவாரம்பித்து விட்டான். நூறு ரூபாய்வரையில் பாங்கி பணத்தை எடுத்துச் செலவழித்துவிட்டுத் திருப்பிப் போட வகையறியாமல் விழிக்கலானான். இன்னும் மூன்று நாட்கள் போனால், மாதந்திரக் கணக்குகளை மானேஜரிடம் ஒப்புவித்தாகவேண்டும். நூறு ரூபாய்க்கு என்ன வகை சொல்வது? வேலை போய் விடுவதோடல்லாமல், ஜெயிலுக்குப் போக வேண்டி வந்துவிட்டால்...? ஐயோ, தன் இளம் மனைவியும், குழந்தையும் என்னவாவது?

"அப்பா பரமசிவம்," என்ற குரலைக் கேட்டதும் பரமசிவம் நிமிர்ந்து பார்த்தான். எதிரில், தான் உத்தியோகம் பார்த்த பாங்கியிலேயே தலைமைக் குமாஸ்தாவான மாணிக்க முதலியார் நிற்பதைக் கண்டான்.

"ஏனப்பா, தெருவில் எதிரே வருபவரைக்கூடக் கவனிக்காமல் நடக்கின்றாயே? மோட்டார், ஸைகிள் ஏதாவது மோதிவிடப் போகிறதப்பா!" என்று சொல்லிச் சிரித்துவிட்டு, அவனைப் பார்த்தார்.

வாயைத் திறவாமல் பரமசிவம் நின்றுகொண்டிருந்தான்.

"அப்பா, பரமசிவம், கடற்கரை வரையில் போய்விட்டு வருவோம், வா. சற்றுக் காற்று வாங்கலாம்," என்று சொல்லிக்கொண்டே, அவன் கையைப் பிடித்துக்கொண்டு, கடற்கரையை நோக்கிச் செல்லலானார் மாணிக்க முதலியார்.

"என்ன செய்வதாக உத்தேசித்திருக்கிறாய், கடைசியில்?" என்று கேட்டார் முதலியார்.

பரமசிவத்துக்குத் தூக்கி வாரிப் போட்டது. "உங்களுக்குத் தெரியுமா? நான் ஒருவருக்கும் தெரியாது என்றல்லவா நினைத்தேன்" என்று பயத்தால் பிடிக்கப்பட்டவன் போல் உளறினான் பரமசிவம்.

"எல்லாம் எனக்குத் தெரியுமப்பா! போன வாரமே எனக்கு விஷயம் புரிந்துவிட்டது. சனிக்கிழமையன்று மத்தியானம் நீ பை நிறைய பணத்தை எடுத்துக்கொண்டு 'கிண்டி'க்குச் சென்றது எனக்குத் தெரியாது என்று நினைத்தாய்? என்னதான் ஆகிறது என்று பார்ப்பதற்காகவே நான் ஒன்றும் தெரியாதவன் போல் பேசாதிருந்துவிட்டேன்" என்றார் முதலியார்.

"ஐயோ, ரொம்பவும் முட்டாள்தனமாக நடந்துகொண்டுவிட்டேனே! அந்த சமயத்தில் வேறு ஒன்றுமே தோன்றாமல் போய்விட்டது. நான் செய்யும் காரி

யத்தில் உள்ள அபாயம் அப்பொழுது எனக்கு துளிகூடத் தெரியவில்லை. கடைசியில், நான் எந்த குதிரைமேல் பணம் கட்டினேனே, அந்தக் குதிரை கடைசியாக வந்து தொலைத்தது! என் தலைவிதி அவ்வளவுதான்!"

"குதிரைப் பந்தயத்திலுள்ள நுட்பங்களைப்பற்றி எனக்குக் கொஞ்சம் தெரியும். ஒரு குதிரையின்மேல் பணத்தைக் கட்டும்பொழுதுள்ள மன அதிர்ச்சியும், பந்தயம் ஆரம்பிக்கும்பொழுது உண்டாகும் மனத்தாங்கலும், நாம் கட்டிய குதிரை முன்னே, பின்னே ஓடி வரும்பொழுது நமக்கு உண்டாகும் ஆத்திரமும், படபடப்பும் எனக்குத் தெரியாததல்ல......"

பரமசிவம் வாயைத் திறவாமல் முதலியார் சொல்வதையே கேட்டுக் கொண்டிருந்தான்.

"எனக்கு இந்தக் குதிரைப் பந்தயத்தில் நம்பிக்கையும் கிடையாது. ஆசையும் கிடையாது. ஆனால், என்னை வேண்டுமென்றே, ஒரு ஆசாமி குதிரைப் பந்தயத்தில் தலையிடத் தூண்டினர்......" என்று தொடங்கினர் முதலியார்.

"யாரது?"

"வேறு யார்? உன் தந்தை தான். அப்பொழுது அவருக்குக் கீழ்தான் நான் இதே பாங்கியில் குமாஸ்தாவாக இருந்தேன். நாங்களிருவருந்தான் அண்ணன் தம்பி மாதிரி இருந்தோம் என்பது உனக்கு அவர் சொல்லியிருப்பார். அவரிடமிருந்த அன்பினுல்தான் உன்னிடமும் எனக்கு இவ்வளவு வாத்ஸல்யமிருக்கிறது என்பதையும் நீ அறிந்திருப்பாய். அவர் என்னிடம் ரகஸ்யமாக, முக்கியமான பந்தயமொன்றில் ஜயிக்கக்கூடிய குதிரையைச் சொல்லி, அதன்மேல் பத்து ரூபாயாவது கட்டச் சொன்னர். ஏன், என் பிராணனையே வாங்கிவிட்டார். எனக்கும் கடைசியில் சபலம் தட்டியது. கரைப்பவர் கரைத்தால் கல்லும் கரையுமல்லவா?"

"கட்டினீர்களா?" என்று ஆவலுடன் கேட்டான் பரமசிவன்.

"என்னிடம் அப்பொழுது காலணா கூடக் கிடையாது. என்ன செய்தேன் என்று நினைக்கிருய்? பாங்கிப் பணத்திலிருந்து பத்து ரூபாய் திருடினேன்..."

"என்ன? நிஜமாகவா?"

"ஆம், அப்பேன். பொய் சொல்லுவானேன்? இப்பொழுது ஒப்புக்கொள்வதால் ஒன்றும் மோசம் போய்விடாது...... நான், உன் தந்தை ரகஸ்யமாகச் சொன்ன குதிரையின்மேல் பத்து ரூபாயையும் கட்டினேன். என் அதிர்ஷ்ட வேளை போலிருக்கிறது; அப்பொழுது நான் கட்டிய குதிரை முதலாவதாக வந்தது. அன்று எனக்குக் கிடைத்தது நூறு ரூபாய். நான் அன்று பத்து ரூபாயையும் தோற்றிருந்தாலும், உன் தந்தை எனக்குப் பத்து ரூபாய் கொடுத்து, பாங்கிக் கணக்கைச் சரிப்படுத்தி விடுவதாக வாக்குக் கொடுத்திருந்தார்......"

"என் தந்தைக்கும் உங்களுக்குமிடையே அவ்வளவு பரஸ்பர அன்பிருந்ததா?" என்று ஆவலுடன் கேட்டான் பரமசிவம்.

"அந்த அன்புதான் இப்பொழுது உனக்கு உதவி செய்ய என்னைத் தூண்டுகிறது. உன்னை இப்பொழுது நீ அகப்பட்டுக்கொண்டிருக்கும் இக்கட்டிலிருந்து விடுவிக்கப் போகிறேன்......"

"நிஜமாகவா? நூறு ரூபாயையுமா? உங்கள் தயைக்கு நான் பரிபூர்ண நன்றி செலுத்துகிறேன். இருந்தாலும், என் தந்தை உங்களுக்குப் பத்து ரூபாய்தானே தருவதாகச் சொன்னர்? நீங்கள் எனக்கு இப்பொழுது நூறு ரூபாய்கள் தரப்போவதாகச் சொல்கிறீர்களே?"

"ஆம். அன்று பந்தயத்தில் ஜயித்த நூறு ரூபாய்களில் பத்து ரூபாயைப் பாங்கியில் திருப்பிப் போட்டுவிட்டேன். பாக்கித் தொண்ணூறு ரூபாயையும் உண்டியில் போட்டிருந்தேன். அது இப்பொழுது கிட்டத்தட்ட இருநூறு ரூபாய்க்கு வந்திருக்கிறது. அதிலிருந்து தான் தரப்போகிறேன். ஆனல் ஒரே ஒரு நிபந்தனை. இனி இம்மாதிரி விஷயத்தில் நீ தலையிடமாட்டாய் என்று சத்தியம் செய்து தரவேண்டும்" என்ருர் முதலியார்.

பிரதிக்ஞை

(கே. கணேசன், பி. ஏ. பி. எல்.)

["ப்ருஹத் ஸ்தோத்ர ரத்னகரம்" என்பது வடமொழியில் கடவுள் வழி பாட்டுத் துதிகளடங்கிய ஒரு தொகுப்பு. அதில் "தேவீ ஸ்தோத்ர"ப் பகுதியில் "பாரத பூமாத்ரு ஸ்தோத்ரம்" என்று தாய் நாட்டின் வணக்கப் பா வொன்று காணப்படுகின்றது. இதை ஆக்கியவர் யாரெனத் தெரியவில்லை. பாரதியாரின் "பாப்பா"ப் பாட்டில் இந்தியாவின் இயற்கை அமைப்பு வர்ணிக்கப்படுவது போலச் சுலபமான இனிய நடையில் ஹிமாலயத்தின் கம்பீர வர்ணனையுடன் இந்த ஸ்தோத்திரம் ஆரம்பமாகின்றது. இறுதியில் மூன்று சுலோகங்களில், தாய் நாட்டின் பக்திப் பெருக்கிலீடுபட்ட தேச பக்தன் தன்னை தேச சேவையில் அர்ப் பணம் செய்துகொண்டு தனது உள்ளக் கிடக்கையைப் பிரதிக்ஞை ரூபமாக வெளியிடுவது விவரிக்கப் படுகின்றது. அவற்றை இங்கு சுருக்கமாகக் குறிப்பிடுகின்றேன்.]

"ப்ரதி ஜன்மனிமே வித்தம்
சித்தம் தேஹஸ்ச ஸந்ததி : |
த்வத்ஸேவா நிரதபூயு :
மாதாத்வம் கருணமயீ" ||

"எடுக்கும் ஒவ்வொரு பிறப்பிலும் எனது பொருள், மனம், உடல், என் வம்சம் எல்லாம், கருணை யுருவான என் தாயே, உனது சேவையிலீடுபடட்டும்."

இம்மாதிரிச் சேவை செய்வதற்கு பிரதிபலன் ஏதாவது தேவையோ? கிடையாது. முழுதும் நிஷ்காம்யக் கர்மமாகவே தேச பக்தன் இந்தச் சேவையைக் கருதுகின்றான். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற நோக்கத்துடன்,

"நமே வாஞ்சாஸ்தி யசஸி
வித்வத்வே நசவா ஸுகே |
ப்ரபுத்வே நைவவா ஸ்வர்கே
மோக்ஷே அத்யருந்த தாயகே" ||

"எனக்கு புகழில் ஆசையில்லை; பெரிய அறிவாளி யென்ற கீர்த்தியும் வேண்டாம்; சுக போக வாழ்வும் தேவையில்லை; அதிகாரத்திலும் விருப்பமில்லை; போகத்திற்கு இருப்பிடமான சுவர்க்க வாழ்வும் வேண்டேன்; ஆனந்த மயமான மோட்சப் பேறும் விரும்பவில்லை."

தேசப் பிரேமை கரை புரண்டோடுகிறது. பட்டம், பதவி வேட்டை, சுக வாழ்வு இவற்றிற்காகத் தேச சேவை என்ற போர்வையணியும் வேஷதாரிகளுக்கு நயமாக சவுக்கடி கொடுக்கின்றார் கவி. எல்லா ஜீவன்களும் நாடி நிற்கும் மோட்ச சாம்ராஜ்யமே தேச பக்தனுக்கு பெரிதாகப் படவில்லை. பின்னர், என்ன தான் வேண்டுமாம்?

"பரம்ச பாரதே ஜன்ம
மான வஸ்ய ச வா பசோ: |
விஹங்கஸ்ய ச வா ஜந்தோ:
வ்ருக்ஷ பாஷாண யோரபி" ||

"ஆனால், பாரத நாட்டிடை, மனிதனாகவோ, மிருகமாகவோ, பக்ஷியாகவோ, ஊர்வனவற்றில் ஒன்றாகவோ, மரமாகவோ, அல்லது கல்லாகவோ, பிறப்பெய்தவேண்டும்."

இந்திய மண்ணில் கல்லாய்ச் சமைவதும் மோக்ஷத்தைவிட சிலாக்கியமாம்! இவ்வாறு கல்லாகப் பிறந்தாலும் அப்பிறப்பின் பயனாக புண்ய பூமியான பாரத நாட்டிற்கு உழைக்கும் பாக்கியம் கிடைத்தால் போதுமென்று,

"நிரந்தரம் பவதுமே
மாத்ரு ஸேவாம்ச பாக்யபாக் |
ஏஷைவ வாஞ்சா ஹ்ருதயே
ஸாக்ஷீ ஸர்வாத்யக: ப்ரபு:" ||

"எப்பொழுதும் தாய் நாட்டின் திருப்பணியில் ஈடு படும் பாக்கியம் எனக்குக் கிடைப்பதாக! என் உள்ளத்தில் உள்ள ஆசை இதுதான். அனைத்திலும் இலங்கும்

(306-ம் பக்கம் பார்க்க)

நாட்டியப் பெண்

"கலைமோஹன்"

தேவகுமாரியின் நடனத்தைப் போற்றாதார் அந்தக் காலத்தில் ஒருவரும் இல்லை. அரசன் சுவேதச் சந்திரன் அவள் நடனச் சிறப்பை அறிந்து, அவளைத் தனது ஆஸ்தான நாட்டியப் பெண்களில் முதன்மையாக வைத்துக் கொண்டான். அரச வாழ்க்கையில் ஏற்படும் மனக் கவலையை மாற்ற தேவகுமாரியின் நடனம் ஓர் மருந்தென்பது அரசனும் அங்கு உள்ள ஒவ்வொருவரும் அறிந்த விஷயம்.

ஜீவநாதன் ஓர் வீரன். அரசன் பட்டாளத்தில் உயர்ந்த உத்தியோகம் வகிப்பவன். வீரன் மட்டுமல்ல, ஓர் சிறந்த ரஸிகனுங்கூட. தேவகுமாரியின் நடனத்தில், மற்றவர்கள் நடனத்தைவிட ஒரு தனிச் சோபை—கலையின் சாயை பொலிவதை அவன் அறிந்தவன். அரசனுக்கு நடனக் கலையின் சூக்ஷ்மங்களையும் சொல்லிக் கொடுத்து, மற்றவர்களைவிட தேவகுமாரியின் கலைப்பயிற்சியையும்—நடனச் சிறப்பையும் அரசனிடம் கூறி அவள் மீது பிரியத்தை உண்டு பண்ணினன். ஜீவநாதனின் அபிப்பிராயத்திற்கு ஒத்து, அரசனும் அவள்மீது ஓர் அலாதி பிரியம் வைத்திருந்தான். ஜீவநாதனுக்குத் தேவகுமாரியின் நடனத்தைப் பார்த்து ரஸிப்பதில் ஒருவித பிரேமை ; ஓர் உற்சாகம்.

அன்று அரசன் பிறந்த நாள் வைபவம். அரண்மனை முழுவதும் பெரிய ஆரவாரம்; கோலாகலம். அன்று தேவகுமாரியின் நடனம். நடனச் சாலையில் பெருங் கூட்டம். அரசனும் ராணியும் தங்கள் ஆசனங்களில் அமர்ந்தார்கள். தேவகுமாரி அரசனுக்கு நமஸ்காரம் செலுத்திவிட்டு அபிநயம் பிடித்து ஆட ஆரம்பித்தாள். அவள் காலின் சதங்கை சலீர் சலீர் என்று சப்திக்கிறது ; நட்டுவனின் தாளம் கணீர் கணீரென்று ஒலிக்கிறது ; பார்த்துக் கொண்டிருப்பவர்களின் மனம் குதுகலத்தால் படபடவென்று துள்ளுகிறது.

ஆட்டத்தை எல்லோரும் வெகு ஸ்வாரஸ்யமாய் அநுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். நட்டுவன் திடுக்கிட்டான். நடனத்தின் தாளம் பிசகுவதைக் கண்டு வேறு ஒருவரும் அதைக் கவனிக்கவில்லை. அபிநய வெறியில் சொக்கி அசைவற்று இருக்கிறார்கள். நட்டுவனின் கண்கள் குமாரியின் முகத்தைப் பார்த்தன. அவள் இருவிழி வண்டுகள் ஜீவநாதனின் முகத் தாமரையில் பதிந்து அங்கிருந்து ஒழுகும் அழகுதேனைப் பருகிக் கொண்டிருந்தன. தேவகுமாரியின் பரிசுத்த உள்ளம் அவனிடம் ஐக்கியமாய் விட்டது. அவன் இவள் ஹிருதயத்தைப் பறித்தெடுத்துக் கொண்டான் என்று ஊகித்தான் நட்டுவன்.

நட்டுவன் உதவியால் நடனம் முடிவுக்கு வந்தது. அரசன் அவளுக்கு விலையுயர்ந்த முத்துமாலை ஒன்று பரிசளித்தான். அதை அவள் உயிரற்ற உடல்தான் வாங்கியது. அவள் உயிர் ஜீவநாதனின் உள்ளத்துடன் கலந்துவிட்டதை அரசன் அறியவில்லை. ஆனல் நட்டுவன் அறிந்து கொண்டான்.

தேவகுமாரியின் நாட்டிய இன்பத்தை பருகிக் கொண்டிருந்த ஜனங்களுக்கு ஒரு வருடமும் ஒரு நாளாய்ப் பறந்து விட்டது.

அரசன், ஒற்றர்கள் கொண்டுவந்த ஒரு விஷயத்தில் மிகுந்த கோபங்கொண்டு செய்வது இன்னதென்று தெரியாது விழித்துக் கொண்டிருந்தான். 'அரசனுக்குப் பொங்கும் கோபத்தில் தன்னையே என்னவாவது செய்து கொண்டால்'? இது ஒரு காவலாளியின் மனதில் ஓடிய எண்ணம். தேவகுமாரியின் காதலை அடைந்த ஜீவநாதன் அதன் பலனை அநுபவித்துக் கொண்டிருக்கிறன். அதுவும் வெகு இரகசியமாக என்பதைத் தவிர வேறு என்ன விஷயமாயிருக்க முடியும் அரசன் கோபத்

திற்கு? ராணியிடம் ஓடினான். ஜீவநாதனின் களவியலைப் பற்றி எடுத்து உரைத்தான். அப்பொழுதுங்கூட அவன் கோபம் தணியவில்லை. உள்ளுக்குள்ளே குமுறிக் கொண்டேயிருந்தது. அப்பொழுதுதான் தனது சக்தியை நினைத்தான்—அரசன் என்ற எண்ணம் உதித்தது. சில வீரர்களைக் கூப்பிட்டு ஜீவநாதனை—தனது உயிர்த்தோழனாக மதித்தவனை—கைது செய்யும்படி கூறினான். திடுதிடென்று நடந்து தர்பார் மண்டபத்திற்கு வந்தான்.

ஜீவநாதன் வீட்டிற்கு வீரர்கள் வந்தார்கள். என்ன காரணம் என்று கேட்டான். அவர்களில் ஆத்திரமுள்ள ஒருவன் வெடுவெடுப்பாக அவனைக் கைது செய்ய வந்திருப்பதாகக் கூறினான். ஜீவநாதனின் வைரநெஞ்சு படபடவென்று துடித்தது. அதற்குள் அவன் கையில் விலங்குபோட ஆரம்பித்தார்கள். அவனா சும்மா இருப்பான்? இருவருக்கும் சண்டை மூண்டுவிட்டது. கையில் ஆயுதமில்லாத குறைவால் ஜீவநாதன் அக் கூட்டத்தாரிடையே அகப்பட்டுக் கொண்டான். முடிவில் ஒரு சிறு யோஜனை அவன் மூளைக்குத் தட்டுப்பட்டது. பொத்தென்று தரையில் விழுந்து மூர்ச்சை ஆனான். வீரர்கள் திடுக்கிட்டு சுவாசத்தைக் கவனித்தார்கள். சுவாசம் இல்லை. உயிரற்ற உடலைச் சுமந்து கொண்டு தர்பார் மண்டபத்திற்கு வந்தார்கள்.

சுவேதச்சந்திரன், ராணியுடன் மந்திரி பிரதானியர் புடைசூழ, சபா மண்டபத்தில் ஜீவநாதன் ஓர் கைதியாக வருவதை எதிர் நோக்கியிருந்தான். ஆனால் அவன் கண்கள் கண்டது ஜீவநாதனின் உயிரற்ற உடலைத்தான். அரசனுக்கு வீரர்கள் சகல விபரமும் சொன்னார்கள். இவன் இவ்வளவு சிக்கிரமாக சாகமாட்டான் என்று அரசன் நினைத்தான். அங்குள்ள ஒவ்வொருவருக்கும் இதே அபிப்பிராயந்தான். இருந்தாலும் இதை சோதித்துப் பார்த்துதான் முடிவு செய்யவேண்டும் என்று நினைத்து அந்த சவத்தைச் சோதிக்க உத்திரவிட்டான். உயிருள்ள பாம்பு ஒன்றைக் கொண்டுவந்து மேலே விட்டு ஓடும்படி செய்தார்கள். நெருப்பின் அனலை தேகம் பூராவும் காட்டினார்கள். இன்னும் எவ்வளவோ பரீக்ஷைகள். ஒன்றும் பயனில்லை. இறந்தவன் இறந்தவனே.

கூடியிருந்தோர் எல்லோரும் மிகவும் துக்கித்தார்கள். ஒரு வீரனை—ஒரு ரஸிகனை—நம் நாடு இழந்தது என்ற சப்தம் கூட்டத்திடையே கிளம்பியது. 'ரஸிகன்' என்ற வார்த்தை ராணியின் செவியில் பட்டதும் ராணிக்கு ஒரு யோசனை வந்தது. அரசன் காதுக்குள் "தேவ குமாரியை அழைத்து நடனம் செய்யச் சொல்லுங்கள். இவன் உயிரோடிருந்தால் கட்டாயம் கண் விழிப்பான். இல்லாவிட்டால் இறந்தவன் தான்" என்று சொன்னாள்.

கொஞ்ச நேரத்திற்குள் குமாரி வந்துவிட்டாள். சபையில் நடந்த சகலமும் அவளுக்குத் தெரியும். சபைக்குள் வந்ததும், கூடியிருந்தோர் முகம் வாடியிருப்பதையும், அரசன் முகம் கோபத்தால் சிவந்திருப்பதையும் தனது அன்பன் உயிரற்ற உடலையும் கண்டாள். நெஞ்சம் பதைத்தது. கண்கள் நீரைக்கொட்ட ஆரம்பித்தன. இருந்தாலும் அடக்கிக் கொண்டாள். "குமாரி! இங்கு இப்பொழுது நடனம் ஆடவேண்டும். சீக்கிரம் நடக்கட்டும்" என்றான், கோபத் தொனியுடன் அரசன்.

"என்னுடைய நடனத்தைப் பார்க்க அவர் கண்விழித்து விட்டால் கட்டாயம் தண்டனை அடையவேண்டியதுதான். கடைசியில் என் காதலருக்கு நானா எமன்போல் வரவேண்டும்? இனி என்ன செய்வது? வருவதை அநுபவிக்கத்தானே வேண்டும்? எல்லாவற்றிற்கும் ஆண்டவன் ஒருவர் இருக்கிறார். அவரே கதி. எங்கள் காதலை ஏற்றுக்கொள்ளாத இந்த கொடூர அரசனிடம் இருப்பதை விட, இறப்பதே மேல்" என்ற எண்ணங்களைப் பின்னிக்கொண்டிருந்தது அவள் மனம்.

இருள் சூழ்ந்த முகத்துடன் ஆட ஆரம்பித்தாள். ஒளி மங்கிய கண்களைச் சுழற்றினாள். வினாடிக்கொருமுறை ஜீவநாதனின் முகத்தையும் பார்த்துக்கொள்வாள். அவளுக்கு முன்னால் பிரேதம் கீழே கிடத்தப்

பட்டிருக்கிறது. திடீரென்று அவன் கண் இமைகள் துடித்தன. அணு அணு வாய் விரிந்தன. தேவகுமாரியின் கண்கள் கண்டன. வேறு ஒருவரும் காணவில்லை. ஆடிக்கொண்டே தனது கையிலிருக்கும் பட்டுக் குட்டையை அந்த முகத்தின்மீது நழுவவிட்டாள். கொஞ்ச நேரம் கழித்து அதை ஆடும்பாவனையாகவே எடுத்துவிட்டாள். எல்லோரும் கவனித்தது இதையல்ல; அவள் ஆட்டத்தைத்தான்.

ஜீவநாதன் எவ்வளவோ தன் புலன்களையும் மூச்சையும் அடக்கிக்கொண்டுதான் இருந்தான். ஆனால் குமாரியின் நடனத்தைப் பாராமல் எவ்வளவு நேரமிருக்கமுடியும்? இதனால் உயிர்தான் போய்விட்டால்தானென்ன? ஆசை அத்து மீறவே, அடங்கிய புலன்கள் மனதையும் வாரிச் சென்றன. கண்கள் கொஞ்சங் கொஞ்சமாய்த் திறந்தன. இதற்குள் பட்டுக்குட்டை முகத்தில் விழவே அவனுக்கு நினைவுவந்து, மறுபடியும் கண்ணை இறுக மூடிக்கொண்டான்.

சற்று நேரத்தில் நடனம் முடிந்தது. இந்தப் பரீட்சையிலும் அரசனுக்கு தோல்விதான். ஜீவநாதனைத் தன் கைகளால் தண்டிக்கலாம் என்று மனப்பால் குடித்துக்கொண்டிருந்த மன்னன்—காதலின் மகிமை அறியாக் காவலன்—பெரிதும் ஏமாற்றமடைந்தான். பிரேதத்தை எடுத்து கடலில் எறிந்துவிடும்படி உத்திரவிட்டான். தேவ குமாரி சீக்கிரமாக அரசனுடைய உத்திரவையும் எதிர்பாராமல் அவ்விடத்தைவிட்டு அகன்றாள்.

அரச ஆக்கினைக்குப் பயந்து அந்நிய நாட்டின் ஒரு கோடியில் இரண்டு இரத்தினங்கள் கவனிப்பாரற்று ஒளி யிழந்து கிடந்தன. நாட்டியப் பெண்களின் தலைவி ஒருபுறம், ரஸிகர் கூட்டத்தின் தலைவன் ஒருபுறம், உட்கார்ந்திருக்கிறார்கள். இருவர் உள்ளத்திலும் உற்பவித்த குதூகலத்தின் சாயை முகத்தில் பரவுகிறது. அற்ப புத்தியால் யோசனையற்ற அரசனுக்குக் கீழ்ப்பணிய வேண்டியதில்லை என்ற ஒரு மகிழ்ச்சி இருவருக்கும். தேவ குமாரியின் நாட்டியம் தன் மனக் கண்முன் தோன்றிவருவதை அரசன் வாழ்க்கையின் சுகபோகத்தை உயிரற்ற ஜீவன் போல் அநுபவிக்கிறான். இவைகளைக் கவனியாது காலம் தனது போக்கிலே ஓடிக்கொண்டிருக்கிறது.

(303-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸர்வாந்தர்யாமியான ஈசனே இதற்கு சாட்சி!" என்று பிரதிக்ஞை செய்கின்றான் தேசத் தொண்டன். இம்மாதிரியான மனோ பாவத்தில் உயர்வு தாழ்வுக்கோ ஜாதி, மத நிற பேதங்களுக்கோ இட மேதேனும் உண்டா? ஒவ்வொரு பாரத புத்திரனும் பாரத புத்திரியும் இந்த விசாலமான நோக்கத்தைக் கடைப் பிடித்தால் நம் நாட்டை இன்று வாட்டும் பிணிகளனைத்தும் கதிரவன் முன் பனியென மறைவது உறுதி. வாழ்க பாரதம்!

கிழியும் கிளியும்

("சோக்கன்")

நாடகத்தார்

1. தருமி
2. கயற்கண்ணி—*அவன் காதலி*
3. பாண்டியன்
4. நற்கீரர்—*புலவர் சங்கத் தலைவர்*
5. தின்னப்பன்—*காவலாள்*

காட்சி 1.

[ஒரு பூஞ்சோலை. தருமி படுத்திருக்கிறான் தரையில். கயற்கண்ணி, கையில் குடலையுடன், பூப்பறித்துக் கொண்டு வருகிறாள். படுத்திருப்போனைக் கண்டதும் திடுக்கிடுகிறாள். அவனை எழுப்புவதற்கு, மரக் கொம்பினைக் குலுக்குகிறாள். சலசலக்க எழாதது கண்டு, அருகுற்று, உற்று நோக்குகிறாள். களிப்பும் கவலையும் மாறிமாறி முகத்தில் மறைகின்றன.]

க: என்னே களைப்பு முகத்தில்! பாவம்—தூங்குக இனிது—நான் கலைப்பது தவறு! நாணாமல் நானும் நோக்கலாம் ....(படுத்திருப்பவன் விழித்துக் கொள்கிறான் போலும் – நாணத்தொடு கண்களை மறுபுறம் திருப்புகிறாள்)

தருமி: யார்? கயற்கண்ணியா? (எழுகிறான்)

க: ஆம்! (தூர விலகுகிறாள்)

த: எப்படி வந்தாய் இங்கே நீ? வா—போகாதே.

க: நீயிர் எப்படி வந்தீர்? பாண்டியனுடைய காவல்மாப் பூங்காவிற்குள்? பெருங் குற்றமே.

த: நீ எங்ஙனம் வந்தாய்? நான் இங்கு போந்தது தெரிந்தோ? கடவுளருளே அருள். நாமிருவரும் மீண்டும் எதிர்ப்பட வாய்ந்ததே.

க: தந்தைக்கு ஊன்றுகோலாக வந்தேன்.

த: ஏன் என்ன ஆயிற்று அவர் கால்களுக்கு?

க: சறுக்கி விழுந்து விட்டார் நேற்று, வையைத் துறையில். என்னையும் இன்று இங்கு வரச்சொன்னார். அரசர் கோயிற்குள் தன்னுடன், பூஜைக்குப்பூப்பறிக்க அவரால் இயலவில்லை-நான் வந்தேன். நும்மைக் கண்டேன் இங்கே. எழுந்து ஓடிவிடவேண்டும். பாண்டியன் காணின் ஒறுப்பான். எப்படிப் புகுந்தீர் நீயிர்?

த: சோம்பித் திரிகிறேன். வேலையோ ஒன்றுமில்லை.

க: முகம் வாடி யிருக்கிறது, உணவு கொண்டிலீரோ நேற்றிரவு?

த: இரண்டிரவுகளாய் இரையில்லை, புள் போல் பறப்பேனுக்கு. உடம்பு சோர்கிறது. நிற்க முடியவில்லை. வா, உட்கார் கீழே.

க: பாண்டியன் காணானோ?

த: தனது நாட்டில்—மீன் துள்ளும் நீர்வள நாட்டில்—இத்தகைய வறியன் உளனோ என்று அறிந்து வெட்கி மாள்க—மீன் துள்ளும் துகிற் கொடி உட்கிக் கிழிக!

க: எனக்கொன்று தோன்றுகிறது. எந்தைக்குக் கால்நோய். அதே ஆதிசைவ குலமாகிய நம்மை, அவருடைய பணியினைச்—செய்ய அமர்த்துமாறு கூறுகிறேன் அவரிடம். ஆனால், நாணம் என் வாயினைப் பூட்டுகிறதே. எங்ஙனம் நும் திருப்பெயரை யான் விளம்புவது தந்தையிடம்? நீங்களே போய்த் தந்தையிடம் வேண்டிக்கொள்க. அரசன் கோயிற்பணியில் அமர்வது எத்துணைச் சிறப்பு!

த: அரனார் பணியே என் குலத்தொழில்!

க: அரசன் கோயிலில் அரனார் பூசை செய்தற்கே—ஊக்குகின்றேன்-அஃது இழிவல்லவே.

த: மறந்தனையே நீ. பெண்பாதியனை அர்ச்சிக்கும் அர்ச்சகன், பெண் மணந்தவனாக இருத்தல் வேண்டுமே. எனக்குத் திருமணம் ஆகும் முன்—என் குலத்தொழிலில் புகக்கூடாதே.

க: மணந்துகொள்க. (சிரிக்கிறாள்) விழைவது யாரினையோ?

த: வறியன் நான்—எங்ஙனம் மனம் ஒப்புவர் உன் தந்தை, நம் திருமணத்திற்கு? தாய் தந்தையர் தாமில்லை எனக்கு—பொருளுமில்லையே. கவலை சனற்றுகிறது. உந்தையினை எந்தத் துணிவுடன் காண்பது, கேட்பது......

க: அவரை மெல்ல இங்கு அழைத்து வருகிறேன். நும் நிலைக்குப் பரிந்து தாமே மனமிரங்கி...

த: கயற்கண்ணி, என் காதலி—நீ முயலாதிருக்கிறாய் வாளா என்று அஞ்சுவேன் சிலகால். என் பசியை நான் மறப்பது, உன் முகத்தை நினைந்து நினைந்தே. வந்தனை இங்கே உன் மேனியைத் தீண்டலாகாதா நான். (அணுக)

க: (மெள்ள விலகிக்கொண்டு) கையில் பூக்குடலை, மலர்கள் சிந்திவிடும். (கீழே வைக்கிறாள்)

த: ஏன், கூந்தலில் மலர் யாது முடிக்கவில்லை நீ? கொய்து கொணர்கிறேன் சில....அல்லது ...... குடலையிலிருந்து எடுத்து...(எடுக்கப்போக)

க: கடவுட்கெனப் பறித்தன அவை. அவற்றையா?—கூடாது, கூடாது.

த: பொறுத்திரு, கயற்கண்ணி. தற்போது என் காதலியே கடவுளாக இருக்கிறாள். புதுப்பூக் கொய்வதற்கும் பிரிய ஆற்றகிலேன். எதற்குப் பூ? (அவளுடைய கூந்தலை அவிழ்த்து) இதோ—பூ முடித்திருக்கிறாயே (முகருகிறான்) ஆ—என்ன மணம்!

க: நேற்று என்ன முடித்திருந்தேன், கூறுக. (சிரிக்கிறாள்)

த: (முகர்ந்து) சண்பகம்.

க: இல்லை.

த: செருந்தி.

க: இல்லை. அது மூன்று நாள் முன்.

த: முல்லை.

க. இல்லை. அது பத்து நாள் முன்.

த: ஞாழல்.

க: ஞாழல் இந்தப் பருவத்தில் ஏது?

த: என்னால் கூற முடியாது. உன் கூந்தலில். எல்லாம் கமழ்கின்றன. இப்பூக்களை எல்லாம்—அவ்வக்காலை அணிந்ததால், அனைத்து மணமும் கமழ்கிறது உன் கதுப்பு. என்னால் இயம்ப இயலவில்லை நேற்று நீ அணிந்ததை. சுண்ணமும் மஞ்சளும் கலக்க செந்நிறக் குங்குமம் ஆவது போல்—புதுமணமொன்று பிறந்திருக்கிறது—உன் கூந்தலில்!

க: நாள்தோறும் நீராட்டுகிறேனே கூந்தலை—பழைய மணம் எப்படித் தொத்தி நிற்கும்?...

த: உன் கூந்தலுக்கு அது இயற்கையாய் விட்டது—ஆ! இதனைத் தைவரும் பேறுபெற்றேன் இப்பொழுது—அமர்வோம் சிறிது, தரையில்—பின்னல் பின்னி விடுகிறேன்.

க: மகளிர் கதுப்பினைப் பின்னிவிடக் கற்றது நீயிர் எப்பொழுது? (சிரிக்கிறாள்)

த: கற்கவில்லை இன்னும். உன் கூந்தலின்றி எதனை...நான் இல்லறம் நிகழ்த்துகையில்—நாள்தோறும் உனக்கு நானே—மணியும் அணியும் துகிலும் அணிவித்து அழகு காண வேண்டும் என்று மனதில் அவாவித் திரிதருகிறேன்...

க: பற்று—பொருளீட்டும் தொழிலோ? (சிரிக்கிறாள்)

த: அது மறக்கும் பேதையோ நான்? மனையில்—என் தாயோ, உன் தாயோ—மற்று தோழியோ இல்லாத வறுமைக் குடிலில்—நானே உன் தோழியுமன்றோ? அந்நாள் என்று வருமோ?

க: வீணே, இப்படி மனம் சுழலாமல்—மனத்தில் தோன்றுவதை...(கூந்தலை முடி போடுகிறாள்)

த: என் மனத்தில் தோன்றுவதை?...

க: செய்யுளாக்கிப் புலவர் சங்கத்திற்கு அனுப்பினால்.. சுர்ரென்று ஓசை என் தலைக்குள்...

த: செய்யுள் இயற்ற முயன்றேன்—மனம் ஒருவழி நிற்க மறக்கிறது. சொற்கள் 'வாரோம் நிரலில்—என்கின்றன. உன் தலைக்குள் சிலைக்கும் காதற்பண்ணினை நீ செய்யுளாக்கித் தா—அதனைச் சங்கத்தாரிடம் கொடுக்கிறேன்.

க: எனக்குச் செய்யுள் யாக்கத் தெரியாதே! என்னைக் கேட்டால்?

த: என்னாலும் இயலவில்லை. கற்பனைத் தெய்வமாய் நீ என் மனதில் வீற்றிருந்தும், பாட்டு ஒன்றேனும் முடியவில்லையே, ஆனாலும்—பயனென்ன? அரசன் கருதியது வேறு, பொற்கிழியை மண்டபத்தில் தூக்கிக் கட்டி, ஓராண்டு ஆகப்போகிறது—அவன் கருத்திற்கிணங்கிய பாடலே வரவில்லையாம், அனைத்தும் பொய். அவன் கருத்து யாதென்று யாரறிவார்? ஆயிரக்கணக்காய் பாடல்கள் குவிந்துள்ளன. வாரம் வாரம் சங்கம் கூடுகிறது. பாடல்களை ஆய்ந்து, உரைகண்டு, குறிப்புரையுடன் அரசனுக்கு அவ்வப்பொழுது—வாரம் வாரம் அனுப்பிவிடுகின்றனர்—அரசன் அவற்றைப் பார்க்கிறானோ யாதோ? ஆயிரம்பொன் தருவோம் பொற்கிழியில் என்றது வெறும்பொய். நாட்டோர் செய்யுள்கள் இயற்றுவதில் பழகி, இலக்கியம் சிறக்கவேண்டும், புலவர்கள் பெருகவேண்டும்—நாட்டிலே கல்வியும் கேள்வியும் மல்கியதால், உலகோர் இப்பாண்டிநாட்டினைப் புகழவேண்டும் என்ற உயர் கருத்தே அரசனுக்கு. மெய்யாகவே ஆயிரம் பொன்னை ஒருவர்க்குக் கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் கிடையாது அவனுக்கு. அப்படியிருக்க, செய்யுள் நான் செய்ய முயல்வதேன்? பொற்கிழியினை வெல்ல முடியாது பரிசாக.

க: அரசன் இத்தனை கரவுடையனா? மெய்யோ இது?

த: எல்லோரும் அப்படியே பேசிக்கொள்கின்றனர். பொற்கிழியில் பொன்னும் தான் உளதோ—யாரறிவார்? பேருக்குத் தான் நிற்கின்றனர்—காவலாளர், கிழியைக் காத்து—இரவும் பகலும்—மழையிலும் வெயிலிலும் — "கிளி கொத்திக்கொண்டு போய்விட்டது கிழியை—நாம் என் செய்ய?", என்று ஒருநாள் காவற்காரர் முறையிட்டால், முடிந்துவிடும் இந்தக் கேலிக்கூத்து.

Neem
TOOTH - PASTE

"நீம் தந்தப் பசை" பற்களுக்குச் சுத்தத்தையும் பல் ஈறுக்கு ஆரோக்கியத்தையும் கொடுக்கிறது. இது ஈறிலுள்ள ரத்தக் கசிவை நிறுத்தும். நீங்கள் முப்பது நாட்களுக்குப் பசையை உபயோகப்படுத்துங்கள். உடனே இதன் குணம் தெளிவாகத் தெரியும் "நீம் தந்தப் பசையில்" மட்டுந்தான் வேப்பங் குச்சியின், சாரம் நிறைந்திருக்கிறது.

LA-I-JU

The ideal Hair Dressing

கேசத்தைப் படியவைக்கும். ஆனால் சிக்குப் பிடிக்காது. லா-இ-ஜு கூந்தல் தைலம், சுகமாக வாசனையுள்ளது, சுத்தமானது இதில் கலந்திருக்கும் திரவியங்கள் மயிர்க்கால்களுக்கு வலுவைக் கொடுக்கின்றன. இன்றே ஒரு பாட்டில் வாங்கி உபயோகியுங்கள். பலன் இன்றே தெரியும்.

கல்கத்தா கெமிக்கல்

க: என்ன சத்தம்?

த: எங்கே? (சுற்றிப்பார்த்து) யாருமில்லையே.

க: போய்விடுங்கள். அருகு இருக்கின்றனர்—யாரோ—மறைந்து.

த: இல்லை—என் காதில் படவில்லையே.

க: குர் குர் ரென்று உறுமுவதுபோல்... (திரும்பித் திரும்பிப் பார்க்க)

த: ஒன்று மில்லையே.

க: (மீண்டும் சுற்றிச் சுற்றி) என்ன இது? விபரீதமாக முடிந்துவிடும்போலிருக்கிறது—கடவுட்கு குற்றம் செய்தேனோ—இங்கு காதல் பேசியதால்...

த: என்ன, கயற்கண்ணி—பைத்தியம் பிடித்ததுபோல் சுழல்கிறாய்—தலையைச் சொறிகிறாய்... (அவளருகு சென்று அணைத்துத் தாங்கிக் கொண்டு) மெல்ல—படு, சிறிது. (கூந்தல் அவிழ்கிறது) ஆ...ஒரு வண்டு—புகுந்து சிக்கிக்கொண் டிருக்கிறது கூந்தலுள்.

க: என் கூந்தலிலா?

த: அசையாமல் கிட, கொட்டி விடும் நம்மை, நாம் அசைந்தால்!...ஆ—மெல்ல விடுவித்து விட்டேன்—பறந்துபோய் விட்டது!

க: அதன் முயற்சியே...அப்படி—என் தலையில்—ஒரு பூ இல்லையே—ஏனோ வந்தது.

த: மணத்தை முகர்ந்தே.

க: மணமுள இடத்தில் தேனும் இருக்கும் என்று நினைத்தனையோ பேதை வண்டே!

த: நீயும் பேதைபோல் அதனை விளித்துப் பேசத் தொடங்கி விட்டாயே, என்னைப்போல் வண்டும் மயங்கி விட்டது உன் கூந்தலருகே வந்ததும். பல மணங்களும் கலந்ததால் புதுமணம்—அந்தப் புதுமணம் ஒரு புது மலருடையது—சாவகம் ஈழம் சீனம் என்ற பல வெளிநாட்டிலிருந்து நமது வீர வாணிபர் கொணர்ந்த வித்தைச் செடியோ என்று மருண்டுவிட்டது. பாவம் வண்டு சிக்குண்டு சாகத் தெரிந்தது—இனி அறிவு வந்துவிட்டது! கவலேல் நீ! வாராது இனி!

க: யாரோ—வருகிறானே அங்கே!

த: நான் ஓடிவிடுகிறேன்—மெல்லத்தான் வருகிறான்—ஏதோ யோசனையில் ஆழ்ந்ததுபோல்—நம்மைக் கவனிக்கவில்லை.

க: ஆம் ஓடிவிடுக. நானும்...(எழுகிறார்கள்)

த: இனி எப்பொழுது காண்போமோ.

க: தந்தையிடம், அச்சமின்றி வருக. ஒன்று தோன்றுகிறது. நாம் இப்பொழுது ஓடினால்—வருவோன் நம்மைச் சந்தேகிப்பான். ஆதலால் இங்கேயே இருப்போம். புரவலனுடைய பூஞ்சோலையில், மனம்போல் உலாவ உரிமைபடைத்த......

த. தம்பதிகள் நாம் என்று அவன் நினைக்குமாறு நாம் ஒழுகுவோம். பூக்களைத் தொடுப்போம். (உட்கார)

க: (குடலையிலிருந்து பூக்களை எடுத்து) நுமக்கு அவை. நான் இவற்றை...... (உட்காருகிறாள்).

த: (மாலை தொடுப்பதுபோல் பாசாங்கு செய்த) இன்னும் வேண்டும் வில்வம். (எழுகிறான்)

ஒரு குரல்: எனக்கு மரியாதை செய்யும் கருத்துடன் எழுகிறாய்—ஆனால் வில்வம் கொணர்வதற்குப்போல் எழுகிறாயே (சிரிக்கும் சத்தம்)

த: நான் எழுந்தேன், இவள் எழுந்தாளா? ஆதலால் நுமக்கு அஞ்சவில்லை. ஆனால் மரியாதை செய்வதால் எமக்கு இழிவில்லை. கயற்கண்ணி, எழு—(வணங்குகின்றனர்) வணங்கினோம், ஐய. கையில் சுவடிகள்! புலவர் பெருந்தகை என்று காண்கிறது. நற்கீரரேயோ?

க: எமக்கும் புலமை நல்குக, பெரியோய்!

[புதியவன் நுழைகிறான்]

வந்தவன்: செய்யுள் வல்லீரோ நீங்களும்? நற்கீரனா நான்? (சிரிக்கிறான்) அவர் புலமை எங்கே, நான் எங்கே! நற்கீரர் யார் என்று தெரியாத மக்களும் உளரே இப்பதியில்!

த: அந்தச் சுவடிகள் யாவை?

வ: இன்னும் நான் பார்க்கவில்லை.

த: புலவர் சங்கம் அரசர் பிரானுக்கு அனுப்பியுள்ள பாடல்களோ?

வ: ஆம். (நகைக்கிறான்)

ச: இறைவனிடம் கொண்டு போகின்றீரோ? எத்தனை பாடல்கள் உள.

வ: 378 பாடல்கள். ஒரு வாரத்திற்குள்! ஏழு நாட்களில்! எப்படிக் குவிகின்றன, பார். (நகைக்கிறான்) நீயும் அனுப்பியுளாயா?

த: இல்லை. செய்யுள் பாடத் தெரியேன் நான்.

வ: செய்யுள் வாழத்தான் அறிதி போலும். உன்னாலேயே இயற்ற முடியாதாயின்—வீட்டில்—நம் முன்னோர் இயற்றியுள்ள பாடல்கள் இருப்பின்—கரையானுக்கு இரையாகி அழியுமுன்—சங்கத்திற்கு அனுப்பலாம். பொற்கிழி நினக்கே கிடைப்பினும் கிடைக்கும்.

த: தேடிப் பார்க்கிறேன், என் வீட்டில்.

வ: அன்னாய், நீயும்... (நகைத்துக் கொண்டே) பூத்தொடுக்கின்றீர்களா இங்கே—வண்டு இல்லாத இடம் பார்த்து...(மறைகிறான்)

க: தெரிந்துவிட்டது அவனுக்கு உண்மை. பிரிவோம் நாம்.

த: என் தந்தையோ, பாட்டனோ—எழுதிய பாடல்கள் இருப்பின் ... ஓ கடவுளே—(விரைந்து போகையில்) கயற்கண்ணி—உந்தை பால் கூறுகிறாயா? ...இதென்ன? (குனிந்து எடுக்கிறான்)

க: என்ன அது?

த: பாட்டோலை! (படிக்கிறான்)

க: அந்தப் புலவர் நழுகவிட்டுப் போய் விட்டார் போலும் — அவரிடம் கொடுத்துவிடுவோம்.

த: இராது. அடியில் குறிப்புரை ஒன்றுமில்லை—அவன் கையிலிருந்து விழுந்ததல்ல இது!

க: ஏன்? கடினப்பாட்டு என்று சங்கப் புலவர் யாருமே உரை காணமுடியாமல் திகைத்திருப்பர்!

த: இதா? எத்துணை எளியது?

க: எங்கே! (அருகு வர)

த: படிக்கிறேன்...(படிக்கிறான்)

"கொங்குதேர் வாழ்க்கை
அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது
கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின்
மயிலியல் செறிஎயிற்
றரிவை கூந்தலின்
நறியவும் உளவோ
நீ அறியும் பூவே!"

க: எளிய பாடல்! வெள்ளைப்பாடல் என்று அடிக்குறிப்பே எழுதவில்லை போலும்.

த: என் உள்ளத்தினைக்கவற்றேன். உன் கூந்தலில் சிக்குண்ட வண்டின் நிகழ்ச்சியைச் சுட்டுகிறது இது. கடவுளே எனக்கு எழுதித் தந்த செய்யுள்இது. பார், இது பொற்கிழியை வெல்லும்; இறைவனே என் கண்முன் வீசி எறிந்துளார் இதை. இனி நம் திருமணம் திண்ணம். நாளைக்கே பொற்கிழி எனது. (அவளை அணையப் போக)

ஒருகுரல்: கயற்கண்ணி! கயற்கண்ணி!

க: (திரும்பிப் பார்த்து) என் தந்தை. பார்த்துவிட்டார் நம்மை.

த: நான் ஓடிவிடுகிறேன். பொற்கிழியுடன் காண்பேன் அவரை!

குரல்: அரசன் என்று மதியாமல், மரியாதைக்கு எழாமல்......

த: ஐயையோ—அவனா அரசன்?

க: பெருங் குற்றம் செய்தோமே.

த: பொன்முடியுடன் அன்றி தன் குஞ்சியொடு கண்டிலேன்—ஓ, இறைவர் ஒறுப்பாரே? அன்றி, உன் தந்தை ஒறுப்பரோ...(ஓடி மறைகிறான்)

க: வருந்தி, கொண்டி வரேல், ஐய—வந்துவிட்டேன்...(குடலையை எடுத்துக்கொண்டு ஓடி மறைகிறாள்)

காட்சி 2.

[ஏழுநாட் பின்னர், சங்க மண்டபம். நக்கீரர் எழுதிக்கொண் டிருக்கிறார். வெளியே இரைச்சல் கேட்கிறது.

ந: இக்கூச்சலில் எப்படி எழுதுவது? (எழுந்து சாளர வழியே நோக்கி) யார் அது? பொற்கிழியை அறுப்பதற்கா? ......திண்ணப்பா, திண்ணப்பா!

[திண்ணப்பன் நுழைகிறான்]

தி: அரசன் ஆணை. ஊர்வலத்துடன், தருமி என்ற மாணி வந்துளான்......

ந: தருமி! அவனது பாடலா அரசன் கருத்துக்கு இணங்கியது? அவனை அழை இங்கே. தருமியின் பாடலா... நினைவுவருகிறது... (அருகிருக்கும் ஒரு சுவடிக் கட்டினை எடுக்கையில்)

தி: சங்கத் தலைவர் உளரா என்று கேட்டான் அவனும். இங்கு நீங்கள் நண்பகலில் — இம் முதுவேனில் — தனியே இருப்பீர் என்று எண்ணவில்லை— அழைத்து வருகிறேன்... (போகிறான்)

ந: "கொங்குண் சுழற்சி"........ என்று துவக்கம் நினைவு வருகிறது...... (ஒரு ஓலையைப் பொறுக்கி எடுத்து) ஆ... (படிக்கிறார்)

"கொங்குதேர் வாழ்க்கை
அஞ்சிறைத் தும்பி!
காமம் செப்பாது கண்டது
மொழிமோ........"

...ஆனால் இறுதியில்...உளவோ என்ற வினா, தன் விருப்பப்படியே விடை கூறும்படி கோருவதாக — நினைவு எனக்கு!...(பார்த்து)ஆம்...இது ஒரு குற்றம் என்று ஏன் கொள்ளக் கூடாது? (சிரிக்கிறார்) "செறிஇய நட்பின்......" அளபெடை எதற்கு? சொல்வன்மை யில்லை புலவனுக்கு! "அரிவை கூந்தல்!" அரிவை—முப்பதாண்டு மாதினையா மணக்கப் போகிறான் பதினறு வயதுக் காளைக் காதலன்? (நகைக்கிறார்) பல குற்றங்கள்! வருக, தருமி!—பொற்கிழி போய்விட்டால்...கூடாது...கூடாது....(யோசிக்கிறார்).

[தருமியுடன், திண்ணப்பன் வருகிறான்]

த: போற்றி, பெரும! (வணங்குகிறான்)

ந: பொற்கிழி உனதா?

த: ஆம். அரசன் ஆணை. ஊர் அறிய விளம்பினன்! காண்க, அவன் ஓலையும் இதோ! சங்கத்திர் நீயிர் அந்தப் பாட்டினைப் பெரிதும் புகழ்ந்து, சொல்லழகு பொருளழகுகளை நெடிது விளக்கிக் குறிப்புரையும் சார்ந்து எழுதி வேந்தனுக்கு விடுத்திருந்தால், பொற்கிழியை எனக்கு......

ந: பொற்கிழி உனக்கு அளிப்பது தகுதியன்று; திண்ணப்பா, அரசனிடம் போய்ச் சொல்லிவிடு.

த: ஏன்? இதோ... அரசன் கையெழுத்திட்ட ஓலை, பாண்டிய முத்திரை!

தி: மீனும்......

ந: மீனே, பேனே—பிதற்றேல் என்னிடம், போய்ச் சொல்லு. சங்கத் தலைவன் நான். சங்க மண்டபத்தினுள்ள பொற்கிழியை என் அனுமதியின்றி யாவரும் தொடக்கூடாது!

தி: சரி —அப்படியே (போகிறான்)

த: அரசன் கருத்துக் கிணங்கியது என்று அரசன் அறைந்தால் போதாதா? நீயிர் தடுப்பதேன்? நுமக்கென்ன உரிமை—சங்கத் தலைவராயினும்? நானும் போய்ச் சொல்லுகிறேன் அரசருக்கு.

ந: (கையைப் பிடித்து இழுத்து) நீ இரு, இங்கே!

த: ஏன்?

ந: சில கேட்கவேண்டும் உன்னை!

த: (நடுநடுங்கிக் கொண்டு) என்ன?

ந: அமர் இங்கே, நடுங்காதே, நான் கேட்கும் வினக்களுக்கு விடை பகரவேண்டும்!

த: எதோ தெரிந்து கூறுவல்!

ந: இந்தப் பாட்டின் பொருளை அறியாயா? விளக்கி யுரைப்பாயா?

த: உரைப்பேன்.

ந: இதென்ன துறை?

த: காதற் துறை.

ந: அகப்பாட்டு என்று சொல்லு. என்ன துறை?

த: நாணிக் கண் புதைத்தல்.

ந: காதலி கண் புதைந்திருக்கிறாளா?

த: வண்டோச்சி நெருங்குதல்.

ந: வண்டொடு பேசுகன்றோ நெருங்குகிறான்—தூதுவதாகக் கூறுகிறாயே நீ. அது தூரப் போகிடின், அவன் வினவுக்கு எப்படி விடை கூறமுடியும்?

த: சேண் சென்று அறிந்து மீண்டுவந்து கூறுமாறு இரக்கிறான் அதனை!

ந: இதுவரை, அது ஒரு பூவினையும் அறியாதோ? இனித்தான் சென்

றறிந்து வரவேண்டுமோ—சிறைப்பட்டுக் கிடந்ததோ?

த: ஆம்—அவள் கூந்தலில் சிக்குண்டு கிடந்தது—குர்குர்ரென்று சத்தமிட்டுக்கொண்டு. அதனை விடுவித்ததும்...

ந: (முழங்கச் சிரித்து) அதனால் தான் அஞ்சிறைத் தும்பி என்றாரோ— "அழகிய சிறையில் கிடந்த யானையே" என்று அழைக்கிறார்!

த: தும்பி என்றால் யானையல்ல.

ந: பின் என்ன?

த: இங்கே வண்டு!

ந: முதலடியை நன்கு நோக்கு, "கொங்குதேர்"—தேர்-நாற்படைகளில் ஒன்று. பின்னர் கூறுவது யானைப்படையன்றி வேறெதாயிருக்கும்?—

த: ஆம்—யானைப்படை!

ந: தேர் எங்கே செய்யப்பட்டது, கூறுவாயா?

த: கொங்கு நாட்டில்!

ந: சரி—(நகைக்கிறார்) அதனை இயற்றியவர் யாவர்—அவர் கைகளைப்பறறி—என்ன தெரிகிறது--நீள்கையா—தாழ்கையா......

த: வாழ்க்கை—ஓங்கி வாழ்ந்த...வாழ்க்கைகள்!

ந: சரி—அழகு. ஓங்கி என்று எப்படிக் கூறினை? ...அச்சமில்லா வாழ்க்கையரா?

த: ஆம்—அவர் தச்சர் தானே, போரில் வாரார்—நில்லார்.

ந: அஞ்சு இறை என்ற அடை—அஞ்சுமியம்பினர் என்று காட்டுகிறதே.

த: இறைவனுக்கு அஞ்சுவர்—ஆதலால் அஞ்சிறை என்கிறது பாட்டு.

ந: சரி—"காமம் செப்பாது" என்பதின் பொருளோ?

த: காமத்தை யாரும் வெளியிட்டுச் செப்ப நாணுவர். மறுகி மறுகிச் சாகுவர். பெண்டிர் மட்டுமல்ல—ஆடவருமே. பாங்கனுடனும் கூறான் தலைவன்.

ந: ஆதலால் செப்பாது காமம், எது செப்பும்?

த: கண்களே செப்பும்.

ந: ஆதலால்தான், "கண்டது மொழிமோ" என்றிருக்கிறதோ?

த: "கண்டது மொழிமோ" என்றிருப்பின் பொருள் சிறக்கும்.

ந: சரி—"கண்ணீர் பொழிமோ" என்று மாற்றிக்கொள்கிறேன். அரசன் ஒவ்வாவிடின்...

த: அவர் புலமையினும் நம் புலமையே பெரிதாதலால்—பொழிமோ என்றே திருத்துக!

ந: அது பின்னர்! "மயிலியல்" மயிலின் இயலைச் சிறிது கூறுக.

த: செய்யுள்தான் இயற்றத் தெரியாதென்றால், கண்காணும் பொருள்களை வர்ணிக்கத் தெரியாதா அடியேனுக்கு?

ந: மெய் கூறிவிட்டாய். இந்தப் பாட்டினை நீ எழுதவில்லை?

த: எழுதவில்லை.

ந: பொற்கிழி உனக்கெப்படி உரிமையாகும்? போ——உன் வீட்டிற்கு (எழுகிறார்)

த: அரசன் ஆணையை மீறுகின்றீரா நீர்?

ந: புரவலன் புலமையை ஒரு பொருட்டாக நீ மதியாமல் இகழ்ந்து என் புலமையைப் புகழ்ந்தாய் நீயே......

[பாண்டியன் வருகிறான்]

பா: என்னை இகழ்ந்தா?

த: வேந்தே, தடுக்கின்றார் சங்கத்தலைவர்! இகழ்கின்றார் நம்மை—

பா: ஆம்—நான் புகுந்தேன்—எழவில்லை (சிரிக்கிறான்) என் காவலர் காப்பர் உன்னை—போ—பொற்கிழியை எடுத்துக் கொள்; போ.

ந: அவன் எழுதிய பாடலல்ல அது. தானே ஒப்புக் கொள்கிறான்.

பா: சங்கத்திற்குக் கொணர்ந்தவன் அவனே, அஃதே போதும்.

ந: கிளி உளறுகிறது, பிறன் யாரோ கற்பித்த சொற்களை, கிளிக்குப் பொற்கிழியா?

பா: ஆம்—அதன் குரலினிமைக்காகப் பொற்கிழி!

ந: கிளிக்கு ஊட்டவேண்டுமாயின் ஒரு நற்பழம் கொடுக்கலாம். இது சங்க மண்டபம். நானே அரசன் இங்கே. உயிர் நீப்பினும்.

பா: காவலர்காள், பிடித்துச் சிறை செய்க இப்புலவனை. (மூவர் நுழைகின்றனர்—தயங்குகின்றனர்)

ந: அந்தப் பாட்டின் பொருளும் அறியான். தும்பியை வண்டு என்கிறான் ஒரு முறை—யானை என்கிறான் மறு முறை. தன் மதம் நிறுவ அறிகில்லான். என்முன் நடுங்குவோன், அவை முன் யாது வல்லான்? பேதையன்—அறிவிலி—இவனுக்கோ, பொற்கிழி?

பா: வாளுடன் வீணே நிற்கிறீர்களா—கோழைகள்—சிறை செய்க இவனை! ஏழெட்டேடுகள் உரை நிறைத்தீர். பிற பாடல்கட்கு வழங்காப் புகழ் மொழிகள் அடுக்கினீர் இப்பாட்டிற்கு, எனக்கு விடுத்த சுவடிக் கட்டில். இப்பொழுது குற்றம் — காண்பதா? (காவலர்கள் நக்கீரரைச் சூழ்ந்து கொள்கின்றனர்.)

ந: என்ன குற்றம் பொறுமையுடன் கேட்டருள்க! இம் மூவரும் சிவபிரானின் முக்கண் போல் தீப்பறக்க விழிப்பினும் நான் அஞ்சேன்! குற்றம் யாதெனின்......

பா: என்ன குற்றம்? பேசத் தெரியாத வண்டினைப் பேசச் சொல்வது ஒரு குற்றமோ? ஒவ்வொரு பூவின் மணம் ஒருவகைச் சிறப்புடைத்து—ஆதலால் இது அதனினும் நறிது—இவ்விரண்டினும் நறிது—என்று ஒப்பும் உயர்வும் கூறுவது ஒரு பிழையோ?

ந: இவை குற்றமாகுமா, இறைவ? புலவனின் கற்பனைத் திறம், கூந்தலுக்கே மலர்போல் இயற்கை மணமிருப்பதாகக் கூறுவதும் கற்பனையே—குற்றம் என்பேனோ—பல கற்ற புலவனேன்! (நகைக்கிறார்) குற்றம் யாதெனின்...

பா: உன் மனத்தின் பொறாமை! தருமி! போய் எடுத்துக் கொள்! ஏழைப் பார்ப்பான்!...

த: அங்ஙனே!...(போக)

ந: தருமி—தொட்டாயோ? (அவன்பின் போக)

பா: (காவலருக்கு) பிடித்துக் கட்டுங்கள் இவனை!

ந: ஆயிரம் பொன்தானே. ஏழைப் பார்ப்பானுக்கு நும் பொக்கிஷத்திலிருந்து ஆயிரம் பொன் கொடுக்கலாமே—ஏன் இந்தப் பொற்கிழியைத் தரவேண்டும்?

பா: (தருமிக்கு) ஏன் நிற்கிறாய்—போ! எடுத்துக்கொள்!

த: புலவர் சீறுகிறாரே!

ந: புலவர் சீறிப் பயனென்ன? கொடுங்கோல் இவனுடையது. தன் மனதிற்கு இணங்கிய பாட்டு இது என்று அரசன் சொல்லிவிடுகிறது—உடனே அனைவரும் ஒப்புக்கொள்ளவேண்டும். கிளிப்பால் அவன் சொன்னதை மிழற்றவேண்டும், இனிய குரலில்! முன்னைய வேனிலில் தூக்கிய பொற்கிழி இது; ஓராண்டு ஆகிறது. இதுவரை அரசனுக்குத் தன் கருத்து யாதென்று தெரியாதிருந்தது. இன்று தெரிந்துவிட்டது. வேனிற்கால மயக்கம்!

பா: பிதற்றாதே கீரா. பொற்கிழி வேண்டாமா உனக்கு, தருமி?

த: கலகமும் கலாமும் விளைவித்துக் கொண்டு எனக்கெதற்கு ஐய?

பா: போய்ப்பார், உன் காதலி தேம்புவதை. என்னை இங்கு அழைக்க, அரண்மனைக்கு வந்தேகள் அவளே. அவளைக் கண்ட பின்னேனும் பொற்கிழியை விழைவாய்!

த: கயற்கண்ணியா?...ஐய, புலவ, என் பாடலல்ல என்று ஒப்புக்கொண்டேன் நானே. அரங்கேறாமலும் மன்றுபடாமலும கிடந்த அரும்பாடல்கள்—மூலை முடுக்குகளில் முந்தையோர் வீசி எறிந்தனவற்றையெல்லாம் சங்கம் தொகுத்து நாட்டிற்கு உதவவேண்டும என்பதே தன் கருத்து என்று மன்னர் கூறினர், பூஞ்சோலையில் பத்து நாள் முன்னர். ஆதலால் தான் நான் கொணர்ந்தேன் இதனைச் சங்கத்தாரிடம். சங்கம் மறுக்கிறது. (போகிறான்).

ந: நும் கருத்து, அஃதோ, மன்ன?

பா: ஆம்—பல்லாயிரப் பாடல்கள் குவிந்துவிட்டன. நான் பொற்கிழி கட்டிய கருத்து முற்றிற்று. கிடைத்த

பாக்களையெல்லாம் தொகுத்து—பல் வகைத் தொகைகளாக்கி, உரையும் எழுதுதல் வேண்டும் சங்கப் புலவர். பெரும்பணி உளது. ஆதலால் புதுப் பாடல்கள் போதும்—பழையன போற்றுவோம்.

ந: ஆதலால், பொற்கிழியை இறக்கிவிடத் திருவுளமோ? (நகைக்கிறார்) நான் சொன்ன கொடுங்கோல்!

பா: கொடுங்கோல்—பொற்கிழி தாங்கிய வளைகோலே. — பார், இதனை. (ஒரு ஓலையை நீட்ட)

ந. (வாங்கிக் கொண்டு) மீன் முத்திரையுளது. (சிரிக்கிறார்)

பா: ஏன் சிரிக்கிறாய்? ஆன், மான்-என்ற எதுகைச் சொல் தோன்றிற்றோ?

ந: ஆம், ஐய, பேன் என்ற சொல்லும் உளதே.

பா: கூந்தலைப் பற்றிய பாட்டாதலால், பேன் கருத்தில் உதித்தது உனக்கு. கூந்தலின் மணம் அதனுள் உறைந்த பேனின் நாற்றம் என்று பொருள் காணப் புகுந்தாயோ?

ந: மலரணிந்த கூந்தலுக்குப் பேன் உண்டா, நானறிபேன். என்ன உளது இந்த ஓலையில்—எனக்கு ஆணையா? சிறைக்கு என்னை நடாத்த ஏவும் ஆணையா. நான் தயார், புறப்பட! அரசர்ச் சிறியதற்குத் தண்டனையா?

பா: திறந்து பார் நீயே. அரசனை நீ சிறினால்...

ந: (திறந்து, படிக்கிறார்) "மகளிர் கூந்தலுக்கு இயற்கையாகவே மணமுண்டோ? மலரைச் சார்ந்து பெற்ற மணமேயோ? யாரேனும் புலவன் உண்டோ—இயற்கையே என்று கூற?"

பா: சென்ற ஆண்டு நான் முத்திரையிட்டு வைத்தது இது. என்னது அற்றைநாட் கருத்திற்கு இணங்கவில்லையா இந்த "கொங்குதேர்ப்" பாடல்? "பொற் கிழி" அவனுக்கு நான் அளித்தது பிழையா நக்கீர? கொடுங்கோலனா நான்?

ந: பிழைதான். குற்றம், குற்றமே. (சிரிக்க)

பா: இன்னும் ஏம்பா?

ந: அந்தக் கையெழுத்தினையும் இந்தக் கையெழுத்தினையும் ஒப்பு நோக்கினேன். வேந்தருமக்கு உவச்சர் பலர் உளர். நீ எழுதும் கையெழுத்தை நாம் அடிக்கடி காணுதல் அரிதாகிறது. ஆனால் இது தெளிவு! பொற்கிழி அவனுக்கு அளித்தது பிழை! நீயே எடுத்துக்கொள்ளல் வேண்டும்! (நகைக்கிறார்)

பா: கண்டு பிடித்து விட்டாயே! பொற்கிழி எனதேயாயின், அவனுக்கு நான் கொடுக்க உரிமையுளேன்—ஆதலால், அவனை ஏவினேன்.

ந: சரி—எடுத்துக் கொள்க தருமி! கிளியே—போ. கொத்திக் கொள் பழத்தை!

பா: தருமி! (உரக்க) தருமி!...(காவலரிடம்) கொணர்க அவனை, விரைவில், (காவலர் போகின்றனர்)

ந: என்னே, நின் புலமை மன்ன! நாடகத்திறனும் சொல்வன்மையும் பொருட் செறிவும்—இப்பாட்டில்... ஆ...சங்கத்தலைவனாக நீயே அமர்தற்குத் தகும்.

பா: நான் நாட்டுத் தலைவன். போதாதா? ஆனால் சங்க மண்டபத்தில் என் ஆணை செல்லாமல் தடுத்த தலைவன் நீ. (நகைக்கிறான்)

ந: பொறுத்தி என்னை, (வணங்குகிறார்) புரையிலாப் புலமையோய்!

பா: முன்னை வேனிலிலேயே என் அரசியின் கூந்தல் மணத்தைக் கண்டு மயங்கினேன் உள்ளம். அப்பொழுது பாட வந்திலது வாய்க்கு. சென்ற வாரம், காதலிருவரைக் கண்டதும், யான் கண்டதை மொழிந்த பாட்டேயிது. பெருமை என்ன இதிலே?

ந: செய்யுட்கள் சிந்திக்கிடக்கின்றன உலகெங்கணும் இதுபோல். அதைக் கண்டு துய்ப்பதோடு இராமல் சொல்லாலும் செப்புவதே புலமை. துய்ப்போன், புகல்வோன், துயோன், புலவோன்.

6

பா: துய்த்தான் தருமி. தருமியும் கயற் கண்ணியுமே இப்பாட்டினை வித்திய வர்—ஆதலால் பொற்கிழி அவனுக்கு.

[தருமி வருகிறான்]

த: ஐய, புலவோய், பிள்ளைமதியேனை அழைத்தீரோ?

ந: வருக பிள்ளாய்! பொலிக நும் இல்லறம்! பொற்கிழியை எடுத்துக் கொள் கிள்ளாய்! (சிரிக்க)

த: நான் எழுதியதல்ல அது.

ந: குற்றமில்லை, எழுதியது யார் என்று தெரியும் எனக்கு. (நகைத்து) இதோ —உன் பெயரை அடித்துவிட்டு, வேறு பெயரைக் குறிக்கப் போகிறேன் பாட்டின்கீழ்!

த: இறைவனை அருளியது—பூஞ் சோலையில் கிடந்தது தரையில்!

ந: இறைவன் அருளியதே, போ.

த: பனை ஏட்டில், இறைவனார் என்று குறித்தற்கு நாணினேன்.

பா. இறையனார் என்று பொறித்திடுக, நக்கீர! தருமி, அதோ பார்—கயற் கண்ணி நிற்கிறாள்—கண்ணினுள்ள நீரைக் கலக்குகிறது அவளது கண் மீன்கள், பொழிகிறது ... (இழுத்துக் கொண்டு போகிறான்)

ந: அதிலும் குற்றம் காண்போர் காண்க, நான் புலமையே காண்கிறேன். திசை நோக்கித் தொழுகிறேன் மன்னனை (தொழுகிறார். திடுமென பாண்டியன் நுழைகிறான். பார்த்துவிட்டான் தொழுததை)

பா: என்ன நக்கீர! கிளியும் காதலியும் மகிழ்க என்றுவந்துவிட்டேன் மீண்டு! என்ன தயங்குகிறாய்? சொல், என்னிடம், தயங்காமல்!

ந: இறையனார் என்று பெயர் குறிப்பின் —வருங்காலத்தில்—கடவுளே — முக்கட் சிவனே — செங்கண்மாலோ — குறிஞ்சி முருகனோ—மானிட உருவில் தோன்றி எழுதினார் இந்தச் செய்யுளை என்று ஒரு வரலாறு எழுந்தால்? உன் சிறப்பும் புகழும் போய்விட்டால்?

பா: புலவர்கள் பாடல்கள் எழுதுவது எதனால்? அவரே அறியார். இறைவனார் உள்ளிருந்து இயக்குதலாலன்றோ? அந்தப் பாட்டை நான் தான் எழுதினேனா என்று—இந்த ஏழு நாளும்—வியந்து வியந்து... ஆ... கடவுளே எழுதினார். காதலரும் காட்சியும்—எல்லாம் பொருந்த அருளிய கடவுளே.

ந: எனினும்—சிறுபாத் தொகுதியில் உனது பாடலையே முதலில் வைப்போம்.

பா: கடவுள் வாழ்த்தாகவா? தமிழ்க் கடவுள் முருகப்பிரானையன்றோ முதலில்.

ந: ஆம்—சேய் குன்றம் பாடிய பின்னர்!

[திரை]